கலை, இலக்கியத்
திங்கள் இதழ்

# கலைக்கண்

டிசம்பர்
1973

கண்: 2 | பிரமாதீசஹூ மார்கழிமீ 8வ. (23-12-73) | ஒளி: 8


" அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு." — திருக்குறள்

# நாவலர் பெருமானின் மனமாற்றம்



'வில்லுக்கு விஜயன், சொல்லுக்குஅரிச்சந்திரன்' என்பார்கள். விஜயன் அருச்சுனன். வில் காண்டீபம். மகாபாரதத்தில் யுத்தநாதம் செய்துகொண்டிருந்தது அருச்சுனனது காண்டீபம். பாரதயுத்தம் முடிந்ததும் கண்ணபிரான் மறைந்தான். கண்ணன் மறைந்ததும் அருச்சுனனால் காண்டீபத்தைக் கைகளால் எடுக்கவும் முடியவில்லை. சிறிது அசைக்கவும் முடியவில்லை. ஒருகணம் அருச்சுனனுக்குப் பேராச்சரியமாயிருந்தது. அடுத்த கணத்தில் உண்மை வெளித்தது. 'தான் வெறுங்கருவி; கண்ணன் ஆட்ட ஆடிய சூத்திரப் பாவை. அவன் மறைந்து விட்டான். இனித் தனக்கு இங்கே அலுவலில்லை' என்பதுதான் அருச்சுனன் அடுத்த கண[த்]தில் உணர்ந்த உண்மை.

1873ஆம் ஆண்டு; இற்றைக்கு நூறுவருஷத்துக்குமுன் நாவலர் அவர்களுக்கு ஐம்பது வயது. அப்பொழுது நாவலர் அவர்களின் ஆத்மவேகத்தில் திடீரென்று ஒரு மாற்றம் உண்டானது. நாவலர் அவர்களின் உத்தமோத்தம சீடர் சுப்பிரமணிய பிள்ளை என்ற வாலிபர். அந்த வாலிபருக்கு நாவலர் கண்கண்ட தெய்வம். நாவலரின் பாத குறடுகளைப் பூசிப்பவர் சுப்பிரமணியபிள்ளை. நாவலர் தமது தருமங்களையும் வகுத்துவைத்த திட்டங்களையும் பிள்ளையிடம் ஒப்பிக்க எண்ணியிருந்தார். 1873இல் சுப்பிரமணிய பிள்ளைக்குத் திடீரென்று இறைவனின் அழைப்பு வந்துவிட்டது. அந்த அழைப்பு நாவலர் அவர்களுக்கு, வெகுசீக்கிரத்தில் தமக்கும் அழைப்பு வரும் என்பதற்கு [அ]றிகுறியாயிருந்தது.

நாவலர் அவர்களை அவர்களது பன்னிரண்டாம் வயசில் மத்திய கல்லூரியில் ஆட்கொண்டு அவர்களை முற்றுமவிழுங்கியிருந்ததொரு சக்தி, அவர்களின் ஐம்பதாம் வயசில் திடீரென்று மாற்றம் எய்தியது. அவர்களின் ஐம்பதாம் வயசிற்குப் பிந்திய சரித்திரத்தை முந்திய சரித்திரத்தோடொப்பிட்டுப் பார்ப்பவர்க்கு விளங்கக்கூடியதாயிருக்கும்.

பண்டிதமணி
சி. கணபதிப்பிள்ளை

பாதிரிமாரின் மதமாற்றத்தைத் தடுக்[க] அனுப்பப்பட்டவர் நாவ[ல]ர். அது ஒருஅளவுக்குக் கைகூடியதும் அவர் மாணவருக்கும் அவருக்கும் அழைப்பு வருவதில் நூதனமில்லை.

மதமாற்றவேகம் தணிந்தபின் சைவசமய வளர்ச்சி கைகூடவேண்டுமானல் அதற்கேற்ற பக்குவம், தவம் சூழலிலிருக்க வேண்டும்.

'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்ற உண்மை சூழலில் அமையவேண்டும. நமது குறையைப் போக்குதற்குத் தவமே தக்கவழி; அயலைக் குறை கூறுவது அறியாமைவழி.

அசுரசக்தி மிகுங் காலங்களில் தேவர்கள் தம் தவக்குறைவை உணர்ந்து தவத்தைப் பெருக்குவதைப் புராணங்களிற் படிக்கின்ருேம்.

நாவலர் அவர்களின் சைவவளர்ச்சித் திட்டங்கள் அப்படியேயிருக்க, அவர்கள் திடீரென்று மறைந்தது, நூருண்டு காலமாக நம்மிடமிருந்து வரும் தவக்குறைவையே காட்டுவதாயிருக்கின்றது.

நூருண்டுகளுக்குமுன் நாவலர் பெருமானுக்கு உண்டான மனமாற்றத்தைச் சிந்தித்து, நம்பால் வளருகின்ற தவக்குறைவுகளை ஆராய்ந்து கண்டு, இந்த 1973ஆம் ஆண்டு தொடக்கம் அயலை நோவாது தவமிருப்போமாக.

**ஒரு முக்கிய குறிப்பு:**

நாவலர் பிறந்தது தமிழ் மார்கழி, 5ஆந்தேதி. இந்த வருடம் 151ஆவது வருடம்.

நாவலர் [த]ம் [சீ]டருக்கு ஒரு சரித்திரம் எழுதினர். அது இருதயக்கண்ணீரால் எழுதிய சரித்திரம். 12 அத்தியாயங் கொண்டது. முதல் 11 அத்தியாயத்தைக் கண்ணுற் கண்டதுண்டு. ஆனல், அது காதுகளுக்கெட்டாமல் மாயமாய் மறைந்தது பெரியதொரு சரித்திரம். "1873ல் நாவலரின மனமாற்றம் எண்கின்ற சுப்பிரமணியபிள்ளையின் சரித்திரத்தின் சரித்திரம்" என்ருெரு சரித்திரம் அவசியம வெளிவரவேண்டியது; சைவ உலகு படிக்கவேண்டியது.

**மற்றுமொன்று:**

மனிதரைப் பாடாத நாவலர் சுப்பிரமணிய பிள்ளைக்கு, 'இரங்கற்பாமாலை'யுஞ் செய்தார். அது உயிர் தப்பி வெளிவந்துவிட்டது. இப்பொழு[து] நாவலர்பிரபந்தத்தில் அநுபந்தமாய் வந்திருக்கிறது. மாலை இருபது தரவு கொச்சகங் கொ[ண்]டது.

**முதற் கொ[ச்]சகம்:**

என்னுடைய கண்மணியே
எனதன்பர் சிகாமணியே
பின்னமறு புகழ்பொலிசுப்
பிரமணியப் பெருந்தகைநீ
என்னையுனக் கன்னைபிதா
இனியகுரு என்றுமுன்னர்ச்
சொன்னதென்னை? பின்ன
ரென்னைத்
துறந்ததென்னை?சொல்லாயே!

பிரமாதீச ஹூ,
மார்கழி மீ,
௫ (5) வ.

## கையை நீட்டு

புலவர் பெ. பொ. சிவசேகரன்

கோயில் கோயில் என்று சொல்லிக்
கோடி கோடி கொட்டுருய்
வாயில் தேடி வந்த ஏழை
வயிறு வாடிச் சாகிருன் 1

மாடி வீடு கட்டிக் கொண்டு
மன்னனுக வாழ்கிருய்
வீடி லாது ஏழை குளிரில்
விடுதி விட்டுச் சாகிருன் 2

காணி பூமி கணக் கிலாது
கால மெல்லாம் சேர்க்கிருய்
பேணி ஏந்திக் கால் கடுக்கப்
பிச்சை ஏழை கேட்கிருன் 3

வேதம் ஓதி விளக்கை ஏற்றி
விரத நோன்பு செய்கிருய்
சாதம் சாதம் என்று கத்திச்
சாகும் ஏழை கேட்கிருன் 4

நீதி நேர்மை உன்னைக் கண்டு
நிலை கொளாது ஓடுதே
பீதி கொண்டு ஏழை நெஞ்சுன்
பிடியில் ஆடித் தவிக்குதே 5

காசை எண்ணிக் கணக்குப் பார்த்து
கையை நோகச் செய்கிருய்
கூசிக் கூசி நடக்கு மேழை
குளிரக் கையை நீட்டினுல் 6

பேசு மாற்றல் அற்ற வந்தப்
பெரிய கோயில் அதிரவே
ஈசன் எளிய னுகி வந்துன்
இதய வாசம் செய்குவான். 7

### வாசக நேயர்களுக்கு

'கலைக்கண்' ஓராண்டு சந்தா பூர்த்தியானவர்கள் தயைகூர்ந்து டிசம்பர் 31க்கு முன்னதாகச் சந்தாத் தொகையை அனுப்பி, தங்கள சந்தாவைப் புதுப்பிக்குமாறு வேண்டுகிருேம்.

பதிப்பாசிரியர்

28, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.

# கலை சமைப்போம் உயர் நிலை அமைப்போம்

கலைக்கண்

பிரமாதீசஹூ மார்கழி மீ 8உ (23-12-73)

## பார்வை

# செயற்கரிய செய்தார்

கற்றார் பிறரெல்லாங் காசினிப்பொய் வாழ்விலேத்
துற்றார் செயற்பால வுன்னாராய் — முற்றார்
நயத்தகைய வாறுமுக. நாவலனே யென்றுஞ்
செயத்தகைய செய்தான் றெளிந்து.

செயற்கரிய செய்த சான்றோர் பலரும் இருவகை வெற்றிகளை ஈட்டி இருக்கிறார்கள். ஒன்று புறப்பகை வெல்வதால் ஆய வெற்றி; மற்றது அகப்பகை வெல்வதால் ஆய வெற்றி.

உலகம் போற்றும் உத்தமர் காந்திக்கு இந்த இருவித வெற்றிகளும் உண்டு. விடுதலைப் போராட்டத்தில் ஆங்கிலேயரை வென்றது ஒன்று; அழுக்காறு. காமம் போன்ற அகப்பகையை வென்றது மற்றது.

புறப்பகை வெற்றியை விட அகப்பகை வெற்றியை அறவோர் பெரிதும் பாராட்டுகின்றனர். அகப்பகையை உள்ளூறு பகை என்று கம்பர் கூறுகின்றார்.

நாவலர் பெருமானும் மொழிக்காகவும் சமயத்துக்காகவும் பணிபுரிந்து வெற்றிகளைப் பெற்ற அதே நேரத்தில் உள்ளூறு பகையையும் வென்று உத்தமரானார்.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் பாடிய காரிகிழார் என்னும் புலவர் உன் வெண்கொற்றக்குடை முக்கண்ணன் கோயிலை வலம் வரும்கால் மட்டுமே தாழ்ந்து விளங்கும் என்று பாராட்டுகிறார். தன்மானத்தைப் பொறுத்தவரை நாவலர் பெருமானும் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியாகவே திகழ்ந்தார். முக்கண்ணன் கோயிலை வலம்வரும்போது மட்டுமே அவர் தலைவணங்கினார்.

மானிடர்க்குத் தலைவணங்காத துணிவை நாவலர்க்குக் கொடுத்தவை பல. ஒன்று அவரது தெளிந்த கல்வி; மற்றது தர்மத்திலிருந்து சிறிதும் விலகாத ஒப்பற்ற வாழ்வு. இவை எல்லாவற்றுக்கும் மேலாக விளங்கியது நாவலர்பெருமான் உயிரினும் மேலாகப் பேணிய ஒழுக்கம்.

நாயன்மார்களின் பின் சமயத்தை வளர்க்க முற்பட்டோர் பலருள்ளும் நாவலர் தனி இடத்தைப் பெற்றார் என்றால் அதற்குக் காரணம் அவர் வாழ்ந்த சமய வாழ்வே ஆகும். சமயிக்குச் சமய வாழ்வு முக்கியம் என்பதை நாவலர் பெருமான் வாழ்ந்து காட்டினார்.

நாவலர் பெருமான் தமிழ் உரைநடை வளர்ச்சிக்குச் செய்த பணிக்காக அவரை நாம் போற்றுகின்றோம். சமயப் பணிக்காக அவரை நாம் பாராட்டுகின்றோம். உள்ளூறு பகை வென்ற உத்தமராகத் திகழ்ந்தமைக்காகவும் சமய வாழ்வு வாழ்ந்தமைக்காகவும் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த தெய்வமென அவரை நாம் வழிபடக் கடமைப்பட்டுள்ளோம்.

கலைக்கண் இந்த இதழின் முன்பக்கம் நாவலர் பெருமானின் திருவுருவையும், பண்டிதமணியின் கட்டுரையையும் கொண்டு விளங்குகின்றது. கலாநிதி க. கைலாசபதி அவர்களின் சிறப்புக் கட்டுரை இவ்விதழுடன் நிறைவுறுகின்றது. அறிஞர் க. சி. குலரத்தினம், செந்தமிழ்மணி பொன். கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் தொடர் கட்டுரைகள் இடம் பெறுகின்றன. பாரதிதாசன் பாடல்கள் பற்றிய நல்லதோர் ஆய்வுக் கட்டுரையைப் பேராசிரியர் இரா. தில்லைக் கோவிந்தன் எழுதியுள்ளார். மயிலங்கூடலூர் பி. நடராசனின் நூல்நயமும், கவிதை, அறிந்ததும் அறியாததும் முதலிய வழமையான அம்சங்களும் இடம்பெறுகின்றன.

எதிர்பாருங்கள்!

கலைக்கண் சிறப்பிதழ்

நான்காவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு இதழ்

தமிழ்நாட்டு ஆளுநர்

மாண்புமிகு திரு. ஷா அவர்கள்

எழுதிய கட்டுரையுடன் வெளிவருகிறது.

# ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை

## வாழ்க்கை வரலாற்றுத் துறையில் புதிய சுடர்

மயிலங்கூடலூர்

பி. நடராசன்

ஈழத்திலே தோன்றிய தமிழ் அறிஞர்கள், சமூகத் தொண்டர்கள் முதலியோரின் பணிகளைப் பற்றிய முழுமையான—ஆழமான—ஆய்வுகளை மேற்கொள்ள எவரும் முன்வருவதில்லை; 'காலந்தோறும் தமிழ்' என்ற வகையிலேயே மேலோட்டமான ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இந்த நிலை இன்று ஓரளவு மாறி வருகிறது. அறிஞர்களைப் பற்றி ஆழமாகவும் அகலமாகவும் ஆராயும் முயற்சியைச் சிலர் மேற்கொண்டு வருகின்றனர். எனினும், பல்கலைக் கழகம், சாகித்தியமண்டலம், கலைக்கழகம், கலாச்சாரத் துறை அமைச்சு முதலிய நிறுவனங்களே இம் முயற்சிகளைத் திட்டமிட்ட வகையில் சிறப்புடன் மேற்கொள்ள முடியும். பண பலமும் ஆய்வை மேற்கொள்ளக்கூடிய ஆட்பலமும் ஆய்வுக்குச் சான்றுதாரங்களாயமையும் நூல்கள், பிறவெளியீடுகள் என்பவற்றைப் பெறும் வாய்ப்பும் இவற்றிற்கே உண்டு.

தனிப்பட்டோர் இம் முயற்சிகளில் ஈடுபடும்போது பல இன்னல்களையடைய நேர்கிறது. இதனால் அரைகுறையாக ஆய்வு நின்றுவிடுவதுமுண்டு. இத்தகைய பிரச்சினைகளை வெற்றிகொண்டு உறுதியுடன் செயற்படும் தனியார் முயற்சிக்குச் சான்றாக வாழ்க்கை வரலாற்றுத் துறையில் ஒருபுதிய சுடராக ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை என்ற நூல் அண்மையில் வெளிவந்துள்ளது.

கவிஞராக, சிறுகதை ஆசிரியராக, நாவலாசிரியராக, பருவவெளியீடொன்றின் இணையாசிரியராக, விமர்சகராகத் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகமான திரு. விஜயேந்திரன் இந்த நூலின் மூலம் சிறந்த வாழ்க்கை வரலாற்று நூலாசிரியராகவும் தம்மை அறிமுகம் செய்துகொள்கிறார்; எடுத்த பணியைச் சிறப்பாகச் செய்து அனைவரின் பாராட்டுக்குமுரியவராகிறார்.

நூலாசிரியர் ஆசுகவியின் பேரனவர். எனினும், இவ்வுறவுமுறை நூலின் சிறப்புக்கு எந்தவகையிலும் குறுக்கே நிற்கவில்லை. 'இந்நூலிலே யான் ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை அவர்களின் வாழ்வையும், பணியையும் நடுநின்று விமரிசனஞ் செய்திருப்பதாகவே கருதுகிறேன்'—என்ற நூலாசிரியரின் கூற்றுப் (பக். 89) பொய்யன்று என்பதை நூலிலுள்ள 90 பக்கங்களையும் படித்து முடித்ததும் உணர முடிகிறது. இந்நூல் ஆசுகவியின் வாழ்க்கை வரலாற்றையும், பணிகளையும் சுவைபட எடுத்துரைக்கிறது. மேலும், ஆசுகவியின் கவிதைகள், கட்டுரைகள், கண்டனங்கள், விமர்சனங்கள் என்பவற்றிலிருந்து பெறப்பட்ட பொறுக்கு மணிகளையும் இந்நூல் கொண்டுள்ளது. குறிப்பிட்ட பொருளைப்பற்றி மேலும் மேலும் அறிய வேண்டும் என்ற ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில் முன்னோடி நூல்கள் அமையவேண்டும். வேலுப்பிள்ளை அவர்களைப் பற்றி மேலும் அறிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவலை ஏற்படுத்தும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது.

ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை என்றதும் விகடகவி தென்னாலி இராமனின் நினைவும் கூடவே தோன்றும். ஆசுகவியை ஈழத்துத் தென்னாலி இராமனுக்கும் அளவுக்கு அவர் பற்றிய கதைகள் ஈழமெங்கும் பரவியுள்ளன. மலேசியாவிற்கூட இது போன்ற கதைகள் பரவியுள்ளன. அதுமட்டுமன்றி 'எத்தூருக்குப் போனாலும் புத்தூருக்குப் போகாதே' போன்ற சில வசைக் கவிகளும் மக்கள் மனதிற் பதிந்து இன்றுவரை நிலைபெற்று விட்டன. இவற்றின் அடிப்படையிலேயே ஆசுகவி பற்றிய கருத்துணர்வுகள் கட்டியெழுப்பப்பட்டுள்ளன.

'விகடகவி', 'வசைக்கவி' என்பதெல்லாம் ஆசுகவியின்; ஆளுமையின் ஒருசிறு கூறே முழுமையல்ல என்பதை இந்நூல் ஆதாரபூர்வமாக நிறுவுகிறது. இந்நூல் கல்லடி வேலுப்பிள்ளையை வரலாற்று ஆய்வாளராக, வசனநடை கைவந்த வல்லாளராக, சுதேச நாட்டியம், சக்கரவர்த்தினி ஆகிய பருவ இதழ்களின் ஆசிரியராக, ஆசுகவியாக, கண்டனப்புலியாக, தேசியவாதியாக, நவயுகத்தை வரவேற்கும் முற்போக்காளராக, தொழிலாளர் தோழராக, காந்திய வாதியாக, விமர்சகராக, தலைசிறந்த தமிழராக எம்முன்னே நிறுத்துகிறது.

ஆசுகவியவர்கள், அக்காலச் சமுதாயத்தில் வாழ்ந்த பெரும்பாலோருடைய. போக்கையறிந்து அதற்கேற்பத் தமது பாதையை இணங்க அமைத்துக்கொண்டவரல்லர். அவர் காலத்தின் குரலாக—குறியாக—வாழ முனைந்தவர்? சமுதாயத்தின் மேல்மட்டத்திலுள்ளவர்கள், போலிகள் முதலியோருக்கு எதிராக நீச்சலிட்டவர். சமுதாய சீர்திருத்தம் பற்றிய உறுதியான கருத்துக்கள் ஆசுகவியிடம் இருந்தன. அவற்றை மக்கள் அவர் மத்தியிலே பரப்ப முற்பட்டார். பழைய மரபுகளைப் போற்றிய அவர் புதிய மரபுகளை உருவாக்குவதிலும் முன்நின்றார். இவற்றுக்கு உறுதுணையாகச் 'சுதேசநாட்டியம்' இதழை அவர் நடாத்திவந்தார். 'சுதேச நாட்டியம்' பத்திரிகை அஞ்சாமையோடும் சாதனைகள் புரியும் வண்ணமும் பத்திரிகை நடாத்தவேண்டும் என்ற அவாவினர்க்கு ஆதர்ஸமாகத் திகழவல்ல மிகச் சிறந்த ஒரு பத்திரிகையாகும்'— என்று நூலாசிரியர் கூறும் கருத்து ஆசுகவியின் ஆற்றலை அளவிடுவது மட்டுமன்றி, இன்றைய ஏடுகளை மதிப்பிடும் அளவுகோலாகவும் அமையக் கூடியதாகும்.

நாவலர் பரம்பரை என்றதும் கண்டனங்களே எமது நினைவுக்கு வரும். ஆசுகவி அவர்கள் தமது கூர்மையான கண்டனங்கள் மூலம் தாம் நாவலரின் வாரிசு என்பதை நிலைநாட்டியுள்ளார். நூலாசிரியர் சுதேச நாட்டியத்திலிருந்து பெற்று வெளியிட்டிருக்கும் கண்டனங்கள் 'இவை நாவலர் ஐயா அவர்களுடையனவாயிருக்குமோ?' என்ற ஐயத்தை ஏற்படுத்தும் வகையில் நாவலர் பாணியில் அமைந்திருக்கக் காண்கின்றோம்.

ஆசுகவியவர்கள் வாழ்ந்த காலத்தில் படைப்பிலக்கியங்களெனப்படும் சிறுகதை, நாவல் முதலியவற்றுக்குப் போதிய ஆதரவு இருக்கவில்லை. ஆசுகவியவர்கள் தமது இதழ்களில் நொறுங்குண்டஇருதயம், அரியமலர் முதலிய நாவல்களை மதிப்பீடு செய்ததுடன் அவற்றின் இலகுவான மொழிநடையையும் போற்றியுள்ளாரென்பதை இந்தநூல் எடுத்துக் காட்டுகிறது.

மறைமலையடிகளாரின் தனித்தமிழ்இயக்கம் தமிழகத் தமிழ் மேலுமொரு மலையாளமாகவோ கன்னடமாகவோ மாற்றமடைவதைத் தடுத்து நிறுத்தியது. ஈழத்தில் அக்காலத்திருந்த வித்துவசிரோமணிகள் மறைமலையடிகளைக் கண்டித்து எழுதியபோது அவர்களை மறுத்து அடிகளாரை ஆதரித்த பெருமை ஆசுகவியவர்களுக்கு உண்டு என்று நூலாசிரியர் காட்டுகிறார். மறைமலைஅடிகளாரைத் தமது ஆதர்சமாகக் கொண்டுவாழ்பவர் பலர் இன்றும் இங்கு உள்ளனர். அவர்கள் தமது முன்னோடியை அறிந்துகொள்ள இந்நூல் உதவுகிறது.

ஏகாதிபத்திய ஆட்சி நிகழும்போது தமது வயிற்றை நிரப்புவதையே இலட்சியமாகக்கொண்டு அடிமை வாழ்வு வாழும் போக்கினர் பெருந்தொகையினராகஇருப்பது இயல்பு. 'பாஷை இரவல், ஆடையிரவல், உத்தியோகமிரவல்' என்ற நிலையில் மயங்கி வாழ்வோர் மத்தியிலே 'பொற்காலம்' ஒன்றைக் கற்பனையிலே கண்டு அதனை உருவாக்க உழைப்பவர்களே சுதந்திரத்தின் விடிவெள்ளிகளாவர். வெள்ளையராட்சிக் காலத்திலே விடுதலை பெற்ற ஒரு பொற்காலத்தைக் கனவுகண்டு அதனை மக்களுக்குக் காட்டிய சிலரில் ஆசுகவியும் ஒருவர் என்பதையும் இந்நூல் எடுத்துரைக்கிறது.

இந்நூல் ஆசுகவியின் முழுமையான ஆளுமையை மக்கள்முன் நிறுத்தும் பணியை முன்வைத்து ஆக்கப்பட்டுள்ளது. அதற்கு வேண்டிய பொருத்தமான சான்றுகளை திரு. விஜயேந்திரன் பொறுப்புணர்ச்சியோடு தேர்ந்து தொகுத்து வழங்குவதில் வெற்றி கண்டுள்ளார் எனலாம்.

வரலாற்று நூலொன்றைப் பூரணத்துவத்துடன் எழுதுவதில் பல இடர்கள் உள. வரலாற்று நாயகரின் படைப்புக்கள் முழுமையாக நூல் வடிவில் வெளிவருவது அவரின் வரலாற்றை எழுதுவதற்கு இன்றியமையாததாகும். தமிழ்கூறும் நல்லுலகம் ஆசுகவியின் படைப்புக்களை முழுமையாக வெளியிட முன்வர வேண்டும். அப்போதுதான் ஆசுகவியின் பூரணமான வரலாற்றுநூல் உருவாக முடியும்.

திரு. விஜயேந்திரன் அவர்கள் தமக்குக்கிடைத்த சான்றுகளைக் கொண்டு வாழ்க்கை வரலாறாகவும் விமர்சனமாகவும் அமையும் இந்நூலைச் சிறப்பாக எழுதி முடித்தமை பாராட்டத்தக்கது.

நூலாசிரியரின் மொழிநடை தனித்துவமானது. எமது மதிப்புக்குரிய ஆசா

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

### வாசக நேயர்களுக்கு

புதினப்பத்திரிகை அச்சிடுவதற்குரிய தாள், பிற உபகரணங்கள் முதலியவற்றின் விலையேற்றம், தட்டுப்பாடு காரணமாகக் 'கலைக்கண்' சந்தாப் பணத்தை உயர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதென்பதை அறியத்தருகிறோம்.

புதிய சந்தா விபரம் 4ஆம் பக்கத்தில்.

—பதிப்பாசிரியர்—

# பாரதி பாடல்களிற் பாட பேதங்கள்-4

**பாரதியின் பாடல்களையும் ஏனைய எழுத்துக்களையும் பவுத்திரமாகச் சேகரிப்பதோடு பாடபேதங்களையும் பழுதற ஆராய்ந்து உண்மைப்பாடங் காண்பது இன்றைய தலைமுறையினரின் தலையாய கடமையாகும்.**

பாரதியார் படைப்புக்களையும், கடிதங்களையும், பாரதியாருடன் தொடர்புடைய பலவகைப்பட்ட விஷயங்களையும் சேகரிப்பதிலே பல்லாண்டுகள் உழைத்துவந்துள்ள ரா. அ. பத்மநாபன் அவர்கள் 1957ல் சித்திரபாரதி என்னும் நூலை வெளியிட்டார். அந்நூலுக்கு முன்னுரையாக அமைந்திருக்கும் 'நூல் தோன்றியகதை'யில் ஆசிரியர் பின்வருமாறு கூறுகிறார்.

"இன்னும் கூட பல அபூர்வமான 'பாரதிச் சுவடுகள்' எதிர்பாராதபடியெல்லாம் கிடைத்துக் கொண்டேயிருக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்க விஷயமாகும். உதாரணமாக, இந்நூலின் விஷயப் பக்கங்கள் அச்சாகி வந்த சமயம், பாரதி 1907ல் வெளியிட்ட 'எங்கள் காங்கிரஸ் யாத்திரை', 'புதிய கட்சியின் கொள்கைகள்' என்ற இரு கிடைத்தற்கரிய பிரசுரங்களின் பிரதிகள் கிடைத்தன. மேலும், காணமற் போய்விட்டதெனக் கருதப்பட்ட 'சந்திரிகையின் கதை' கடைசி இரு அத்தியாயங்களின் கையெழுத்துப் பிரதி கிடைத்துள்ளது—பாதியாய்க் கிழிந்து.

இதிலிருந்து ஒன்று நிச்சயமாய்த் தெரிகிறது. போன கால தாமதமெல்லாம் போகட்டுமென்று நாம் இப்போதாவது விரிதானதோர் தேடுதல் முயற்சியை மேற்கொண்டோமானால் இன்று கிடைத்திராத இன்னும் பல பாரதி எழுத்துக்கள் கிடைப்பது சாத்தியமே. ஆனால் தனிப்பட்ட ஒருவரது முயற்சி மட்டும் போதாது."

அநுபவத் தெளிவுடன் இவ்வாறு கூறியுள்ளார் ஆசிரியர். இன்றுவரை 'புதிய' விஷயங்கள் கிடைத்தவண்ணமிருக்கின்றன. உதாரணமாக அண்மையில் (தாமரை, செப்டம்பர்'73) பாரதியார் கவிதை ஒன்றும், கட்டுரை ஒன்றும் திரு. சிதம்பர ரகுநாதன் முயற்சியால் கண்டெடுக்கப்பட்டு வெளியிடப்பட்டிருக்கின்றன. 'தொழில் முறை: கர்மயோகம்' என்னும் கவிதை பின்வரும் குறிப்புரையுடன் வெளியிடப்பட்டுள்ளது.

"இதுவரை வெளிவந்துள்ள பாரதியின் கவிதைத் தொகுப்பு எதிலும் இடம்பெறாத பாரதியின் புதிய கவிதை இது. பாரதியின் ஜீவிய காலத்திலேயே பாரதியின் கவிதைகளைத் தேனீப் போல் சேகரித்து எழுதி வைத்து வந்த பாரதி பக்தர்களில் ஒருவரும் தேசபக்தருமான காலஞ்சென்ற திருநெல்வேலி எஸ். முத்தையாபிள்ளையவர்கள் எழுதிவைத்திருந்த பாரதி கவிதைகளிலிருந்து கண்டெடுத்த கவிதை இது."

இவ்வாறு காலத்திற்குக் காலம் 'புதிய' கவிதைகள் கண்டெடுக்கப்படும்என்பதில் ஐயமில்லை. இத்துறையில் முன்னின்று உழைத்துவரும் பத்மநாபன், ரகுநாதன், வி.ஜி.சீனிவாஸன்முதலியோர் பாராட்டுக்குரியவர்கள். இங்குதான் மூலபாடத் திறனாய்வும் இன்றியமையாததாகிறது. முன்னர் குறிப்பிட்டது போன்று, புதிதாய்க் கண்டெடுக்கப்படும் பாரதி படைப்புக்களைத் தக்கபடி பரிசோதித்தும், அவற்றின் நம்பகத் தன்மையை நிறுவியும், தகுந்த விளக்கவுரைகள் எழுதியும் வெளியிடல் ஆவசியகம்.

இதுவரை பாரதியார் கவிதைகளிலே பாடபேதங்கள் ஏற்படுவதற்கான முக்கிய காரணங்கள் சிலவற்றைப் பார்த்தோம். இனி, கவிஞரே செய்த திருத்தங்களினால் ஏற்பட்ட பாடபேதங்கள் குறித்துச் சிறிது கூறவேண்டும். கவிஞரது கையெழுத்துப் பிரதிகளைப் பரிசோதிப்போர்க்கு இவ்விகற்பம் பற்றிய உணர்வு இன்றியமையாதது. ஒருதாரணங் காட்டலாம். 'பாரத மாதா திருப்பள்ளிஎழுச்சி' என்னும் பாடல் முதன்முதலில் சூரியோதயம் என்ற சஞ்சிகையில் வெளிவந்தது. முதற்பாட்டில் இரண்டாவது அடியாக,

"எழுபசும் பொற்சுடர்
எங்கணும் பரவி
யெழுந்து விளங்கிய
தறிவெனும் பரிதி"

என்றே பாரதியார் இயற்றியிருந்தார். பின்னர் பரலி சு. நெல்லையப்பரின் யோசனையின்படி, பரிதி என்ற சொல்லை நீக்கிவிட்டு, இரவி என்ற சொல்லை அந்த இடத்தில் அமைத்துக்கொண்டார். கவிஞர் செய்த மாற்றத்துக்கு இன்னுமோர் உதாரணம் பார்க்கலாம். பாஞ்சாலிசபதம் தொடக்கத்தில் ஸரஸ்வதி வணக்கம் என்னும் பகுதியில் "வேதத் திருவிழியாள்......" என்று தொடங்கும் (நான்காம்) பாடல் கவிஞரது கையெழுத்துப் பிரதியில் அடிக்கப்பட்டுள்ளது. ஆனால் அச்சில் வந்த நூல்களிலெல்லாம அப்பாடல் இடம்பெற்றிருக்கிறது. கையெழுத்துப் பிரதியில் இப்பாடலை நீக்கிய கவிஞர், பின்னர் நூல் அச்சேறுகையில் தன் எண்ணத்தை மாற்றிக்கொண்டாரா அல்லது பதிப்பித்தோர் சேர்த்துக்கொண்டனரா என்பன அறுதியாய்க் கூறப்பட இயலாதவை. இவை மூலபாடத்திறனாய்வினாலேயே விளக்குறலாம். இதைப்போலவே இன்னுமொரு உதாரணங் காட்டலாம். "மோகத்தைக் கொன்றுவிடு - அல்லாலென்றன் மூச்சை நிறுத்திவிடு" என்று தொடங்கும் (மஹாசக்திக்கு விண்ணப்பம்) கவிதையில மூன்றாம் பாடலின் முதலிரண்டடிகள் பின்வருமாறே இப்பொழுதுள்ள பதிப்புகளிற் காணப்படுகின்றன.

உள்ளம் குளிராதோ—
பொய்யாணவ
ஊன மொழி யாதோ?
கள்ள முழுருகாதே—
அம்மா பக்திக்
கண்ணீர் பெருகாதோ?

1910ஆம் வருடம் நவம்பர் மாதத்தில் பாரதியாரின் கவிதையொன்று வெளியிடப்பெற்றது. அப்பதிப்பில் மேலேயுள்ள மூன்றாவது பாடலின் முதலிரண்டடிகள் பின்வருமாறு காணப்படுகின்றன.

கள்ள முருகாதோ —
அம்மா பக்திக்
கண்ணீர் பெருகாதோ
உள்ளம் தெளியாதோ —
பொய் யாணவ
ஊன மொழியாதோ?

இம்மாற்றமும் கவிஞரே செய்த தொன்று! அல்லது பின்வந்த பதிப்பாசிரியர்கள் செய்ததா என்பது இப்பொழுது நன்கறியப்படாத தொன்றாகும். ஏனெனில் பாரதியார் வாழ்நாளில் வெளிவந்தபின் 1930ஆம் ஆண்டிலேயே இப்பாடல் மீண்டும் நூற்றொகுதியொன்றில் இடம்பெற்று வெளிவந்தது. நாம் மேலே காட்டியன போன்ற மாற்றங்களும், திருத்தங்களும் (உண்மையில் இவற்றைப் பாடபேதங்கள் என்றே கொள்ளவேண்டும்) எப்பொழுது, எவ்வாறு ஏற்பட்டன என்பது நுனித்தாராயப்பட வேண்டிய விஷயமாகும்.

இதுகால வரை, எத்தனையோ பதிப்புக்களில் பாரதி படைப்புக்கள் வெளி

## கலாநிதி க. கைலாசபதி

வந்துள்ளன. எனினும் மூலப்பிரதிகளைத் தேடியும் ஒப்பு நோக்கியும் ஓரளவுக்கேனும் ஆராய்ச்சி நெறிகளைக் கடைப்பிடித்துப் பாடல்களை அச்சிட்டுக் கொண்ட பதிப்புக்கள் மூன்றே ஆகும். ஏனையவை உண்மையில "மறு அச்சுக்களே; பதிப்புக்கள் அல்ல." திருத்தமான பாடத்தை மனங்கொண்டு வெளிவந்த பதிப்புக்களில் முற்பட்டது, பாரதி பிரசுராலயத்தார் 1929ல் வெளியிடத் தொடங்கிய பாரதிநூல்கள் வரிசையாகும். 'தேசிய கீதங்கள் (1929), தோத்திரப்பாடல்கள் (1930), வேதாந்தப் பாடல்கள் (1930) என்று சிறுச்சிறு தொகுதிகளாய் வெளியிட்டுப், பின்னர் இரு பெரு நூல்களாக (பாரதிநூல்கள் -காவியங்கள்,பாரதிநூல்கள் — வசனங்கள்) அனைத்தையும் தொகுத்து வெளியிட்டனர். பாரதி பிரசுராலயத்தினர் பாரதியாரின் குடும்பத்தினர் சிலரின் உதவியையும், சுத்தானந்த பாரதியார், தேசிக விநாயகம்பிள்ளை ஆகியோரது உதவியையும் பெற்றுத் தமது நூல்களை வெளியிட்டனர் எனத் தெரிகிறது. "எஸ். தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் கண்டறிந்த பாடபேதங்களும் அவர்கள் சரியானவையென்று ஊகித்தறிந்த பாடபேதங்களும் கீழே குறிப்பிட்டுள்ளன" என்று தோத்திரப்பாடல்கள் அநுபந்தத்திற் காணலாம். 1929ஆம் ஆண்டுக்கு முன் வெளிவந்த (ஸ்வதேச கீதங்கள், ஜன்மபூமி, 1910ஆம் வருடம் பாரதயார் வெளியிட்ட பாடல் தொகுதி, மாதாமணிவாசகம், நாட்டுப் பாட்டு) நூல்களை ஆதாரமாகக் கொண்டு பாரதி பிரசுராலயத்தினர் தேசிய கீதங்கள் தொகுதியைப் பதிப்பித்தனர். எனவேதான் "இவ்வாறான ஐந்து நூல்களையும் ஒப்புநோக்கி இப்பகுதி அச்சிடப் பெற்றது" என்று குறிப்பிட்டனர். இப்பதிப்பில் பாடபேதங்கள் குறிக்கப்பட்டிருப்பினும், அவை முந்திய பதிப்புகளிற் காணப்பட்டனவேயன்றி, துணைச் சான்றுகளின் உதவியுடன் நிச்சயிக்கப்பட்டன அல்ல. அதுமட்டுமன்றி, தேசிகவிநாயகம்பிள்ளை முதலியோர் "முழுநேர'ப் பதிப்பாசிரியராய்க் கடமையாற்றினார்கள் அல்லர். ஆங்காங்கே அவர்கள் குறித்து வைத்திருந்த சில பாடங்கள் அப்பதிப்பிற் சேர்த்துக் கொள்ளப்பட்டன என்பதே பொருத்தமாகும்.

1949இல் பாரதி நூல்களின் பதிப்பு உரிமையைப் பாரதியாரின் சகோதரரிடமிருந்து சென்னை அரசாங்கத்தார் வாங்கியதை யடுத்தும், ஏ. வி. மெய்யப்பச் செட்டியாரிடமிருந்து பாரதி பாடல்களின் ஒலிப்பதிவு உரிமையைப் பெற்றுக்கொண்டதை யடுத்தும், 1950இல சென்னை அரசாங்கத்தாரால் 'பாரதி நூல்களின் பதிப்புக் குழு' ஒன்று நியமிக்கப்பட்டது. ரா. பி. சேதுப்பிள்ளை, சி. விசுவநாத ஐயர், கி. சுவாமிநாதன், ரா. கிருஷ்ணமூர்த்தி (கல்கி) பதிப்புக் குழுவில் பணிபுரியும்பொழுது, பரலி சு. நெல்லையப்பர், கி. வா. ஜகந்நாதன், மு. வரதராசன, ரா. பி. சேதுப்பிள்ளை ஆகியோர் 'ஆலோசனைக் குழு'வில் அங்கத்துவம் வகித்தனர். ஒட்டுமொத்தமாக நோக்குமிடத்து மதிப்புக்குரிய இப்பெரியோர்கள் சுத்தமான மூலபாடத்தை நிர்ணயிப்பதிலும் பார்க்க, "பாடல்களை வரிசைப்படுத்துவதிலும், சிற்சில தலைப்புக்களை மாற்றி அமைப்பதிலுமே" கூடுதல் கவனஞ் செலுத்தினர் எனலாம். மொழித்தூய்மை நோக்கும் இவர்களிற சிலரை உந்தியது என்பதிலும் ஐயமில்லை. ஆயினும் அரசாங்கப் பதிப்பிலே பாடபேதங்கள் தொடர்பான அநுபந்தத்தில் பின்வரும் குறிப்புரை காணப்படுகிறது.

"இந்நூல் அச்சாகி வருங் காலத்து நேர்ந்த பல ஐயங்கள் குறித்துப் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்களிடத்தும், கவிமணி சி. தேசிகவிநாயகம்பிள்ளை அவர்களிடத்தும் கேட்ட போது, அவர்கள் இருவரும் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்துதவினார்கள். கவிமணி அவர்கள் திருத்தங்கள் பல குறித்துவைத்திருந்த தமது பாரதி நூல்களின் முதற்பதிப்புப் பிரதியையும் தந்தார்கள். இவற்றால் பல இடங்கள் மூலபாடத்தில் திருத்தம் பெற்றன".

அரசாங்கப் பதிப்புடன் நேரடியாகத் தொடர்புகொண்டிருந்தவர்களுள் பாடபேத ஆராய்ச்சியிற பயிற்சியும் அநுபவமும் பெற்றிருந்தவர். கி. வா. ஜகந்நாதன் ஒருவரே எனத் துணிந்து கூறிவிடலாம். அவரும் 'ஆலோசனைக் குழு'விலேயே கடமையாற்றினார். பாடபேத ஆராய்ச்சிப் பேரறிஞரான வையாபுரிப்பிள்ளை அவர்களிடம் "ஐயங்கள் குறித்துக் கேட்டபோதும்" அவர் குறித்துதவிய திருத்தங்களாக எவையும் இடம்பெற்றிருக்கக் காணோம். ஆகவே அவரிடம் கேட்கப்பட்டது சம்பிரதாயத்தை அநுட்டித்த அளவுக்கு மாத்திரமே எனக் கொள்ளல் தவறாகாது. எனவே பாடபேதங்கள் பல குறிக்கப்பட்டுள்ளபோதிலும் மூலபாடத் திருத்தம்பற்றிய பிரஸ்தாபம் நூலிலே காணப்படினும், அதற்குவேண்டிய ஆய்வாளரும் அகவமைதியும் அரசாங்கபபதிப்பு முயற்சிக்கு வாய்க்கவில்லையென்றே தோன்றுகிறது. பின்னாளில் மர்ரேகம்பெனி (எஸ்.ராஜம்) பதிப்புக்கள் சிலவற்றுக்கு வையாபுரிப்பிள்ளை அவர்கள் ஆற்றிய அருஞ்சேவையை எண்ணிப் பார்க்கும்பொழுது அரசாங்கப் பதிப்பு அவ்வாராய்ச்சியாளரைத் தகுந்தபடி பயன்படுத்தத் தவறியது என்பதில் தவறிருக்காது. ஆயினும், இதுகாறும் வெளிவந்துள்ள பதிப்புக்களில் அரசாங்கப் பதிப்பே பாடபேத ஆய்வுக்குப் பெருந்துணைபுரிவதாக இருக்கிறது என்பதையும் இவ்விடத்திற் குறிப்பிட்டேயாகவேண்டும்.

இதற்குப்பின் 1969ல் மெர்க்குரி புத்தகக் கம்பெனி வெளியிட்ட பாரதியார் கவிதைகள் என்னும் நூலைக் குறிப்பிடலாம். பதிபபுரையில் பின்வருங் குறிப்புக் காணப்படுகிறது.

"இக்கவிதைத் தொகுப்பு நூலைப் பதிப்புச் செய்யுங்கால் பழைய பதிப்புப் பிரதிகளை ஒப்புநோக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதன் விளைவாக அப்பழைய பதிப்புக்களில் காணப்பட்ட பாடபேதங்கள் கவிமணி அவர்கள் கண்டறிந்த பாடபேதங்கள், குறிப்புரைகள், ஸமர்ப்பணங்கள், முன்னுரைகள் முதலியன இப்பதிப்பில் இடம் பெற்றால் பொருத்தமாயிருக்கும் எனக் கருதி, அவற்றினை உரிய இடங்களில் இணைத்துள்ளோம். இது இந்நூலின தனிச் சிறப்பு எனலாம்."

இப்பதிப்பிற்குக் காலஞ்சென்ற பாரதிபக்தர் திருலோக சீதாராம் அவர்களும் ம. ரா. போ. குருசாமி அவர்களும் உதவியிருப்பதாய்க் கூறப்பட்டிருக்கிறது. இப்பதிப்புக்கு அணிந்துரை வழங்கியுள்ள திரு. அ. ச. ஞானசம்பந்தன் கூறுவதும் கவனிக்கத் தக்கது.

"பாரதியின் பாடல்கட்குப் பாடபேதம் உண்டு என்பதைப் பலரும் அறியார். முன்னர்க் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளையவர்கள் ஓரளவு இப்பாட பேதங்களுடன் பதிப்பித்தார்கள் அவற்றையெல்லாம் ஒப்பு நோக்கித் தேவையான பாட பேதங்களையும் அடிக்குறிப்பாக இட்டு இப்புதிய பதிப்பு வெளிவருகிறது."

இளைய தலைமுறையைச் சேர்ந்த எழுத்தாளர் துணையும் நேர்மையான நோக்கும் இப்பதிப்பாளருக்குக் கிடைத்திருப்பினும், மூலபாடத்திறனாய்வில் முன்னேறிச் சென்றுளளனர் என்பதற்கில்லை.

முந்திய பதிப்புக்களை மட்டுமன்றி, கையெழுத்துப் பிரதிகள், கவிதைகள் வெளிவந்த பத்திரிகைகள், பாடல் சேகரிப்போர் பிரதிகள், மேற்கோள்களாய் எடுத்தாண்டோர் பாடங்கள் முதலிய பல்வேறு பாடாந்தரங்களைப் பலவாறு நுணுகி ஆராய்ந்தே மூலபாடம் நிர்ணயிக்கப்படுகிறது. இலக்கண, யாப்பு அமைதிகள் முதலியனவும் கவனிக்கற்பாலனவே. இவற்றை ஆலோசகர்கள் மாத்திரம் சாதித்துவிட இயலாது. பல ஆய்வாளரது கூட்டுமுயற்சியால் நிறைவேற்றப்படவேண்டிய பணி இது.

"நமது மொழிக்கும் நமது சமுதாயத்துக்கும் புத்துயிர் அளித்தவர் பாரதியார்" என்று அடிக்கடி கூறப்படுகிறது. மொழிக்குப் புத்துயிர் அளித்தமையைச் செம்மையாகத் தெரிந்துகொள்ள வேண்டுமானால், அவரது

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

# மாண்புசேர் பெருந்துறையும் மாணிக்கவாசகரும்

**இறைவன் உரு அற்ற நுண்ணியன்**

"பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே" என்று மணிவாசகப்பெருமான் திருப்பெருந்துறையில் தாம் அருளிய வாழாப்பத்தில் இறைவனை விளித்து அழைக்கின்றார். இறைவனைத் தவிர வேறு பற்றொன்றில்லா அப்பெரியார் திருப்பெருந்துறைத் திருப்பதிக்குமேல் பல பத்துக்கள் பாடியுள்ளார். இறைவன் குருமூர்த்தியாய் எழுந்தருளி வந்து அடிகளாருக்கு நவிலொணா அருள் செய்தது இப் பெருந்துறைப் பதியிலேதான். பாரையும் விண்ணையும் அடிகளார் குறிப்பிடும்போது ஏனைய பூதங்களும் இவற்றிடை அடங்குகின்றன. எல்லாவற்றையும் தாங்கும் பூதம் பார். எல்லாவற்றையும் மூடிக் கவிந்திருக்கும் பூதம் விண். சைவர்கள் இறைவனை ரூபியாகவும், அருவுருவனாகவும, அருவாகவும் வழிபடுவர். பருமையிலிருந்தே நுண்மைக்குச் செல்வது மானுட இயல்பு. இந்த அருவுருவத் திருமேனியைச் சதாசிவம் என்பர் சைவர். சத்தியோடு கூடிய சிவம் என்பதே இதன் கருத்து. சிவலிங்கத்தில் பீடம் சக்தியைக் குறிப்பிடும். வளைந்துள்ள லிங்கம் சிவத்தைக் குறிப்பிடும். "தரை உற்ற சத்தி தனிலிங்கம் விண்ணும்" எனகிறது திருமந்திரம். அருவுருவத்திலே பீடத்தை ஆவுடையார் என்பர் நம்மவர். திருப்பெருந்துறைக் கோயில் ஆவுடையார் கோயில் என்றே பொதுவாக எல்லோராலும குறிப்பிடப்படுகிறது. இக் கோயிலில் லிங்கமின்றி ஆவுடையார் மாத்திரம் உளதாகையால் இதனை ஆவுடையார் கோயில என்பது மிகப் பொருத்தமே. "சென்று சென் றணுவாய்த் தேய்ந்து தேய்ந் தொன்றாந் திருப் பெருந்துறை யுறை சிவனே" என்று மணிவாசகப்பெருமான் இறைவனை மிக்க நுண்மைப் பொருளாகக் குறிப்பிடுகின்றார்.

**திருப்பெருந்துறை நுண்கலைக் கருவூலமே**

இறைவனைப் போலவே இக் கோயிலும் நுண்ணிய சிற்ப வேலைப்பாடமைந்த கலைக் கருவூலமாக அமைந்துள்ளது. இக் கோயில் மண்டபக் கூரை மரத்தால் அமைந்ததுபோலவே தோற்றும் ஆயின் இஃது உண்மையில் மெல்லிய கல் வேலையாய் அமைந்துள்ளது. இத்தகைய வேலைப்பாட்டை வேறு எக் கோயிலிலுமே காணுதல் அரிது. எக் கோயில் சமைக்கும் சிற்பியும் ஆவுடையார் கோயிலைப் புற நீங்கலாக வைத்தே பொருத்தம் எழுதுவது வழக்கம். பாண்டிய மன்னன் பொருளினால் இஃது அமைந்ததேயாயினும் இவ்வமைவுக்குக் காரணர் மணிவாசக மந்திரிப்பெருமானே. இன்று இது தஞ்சை மாவட்டத்தில் சோழ நாட்டுக் கோயிலாகக் கணிக்கப்படினும் மணிவாசகர் காலத்தில் இது பாண்டி நாட்டின் பிரிவினையே சேர்ந்தது. குருமூர்த்தம் தென் முகமாக இருத்தலே மரபு. மணிவாசகருக்கு அளப்பரும் ஞானம் அளித்த இறைவன் எழுந்தருளிய கோயில் தென் முகம் நோக்கி இருத்தல் பொருத்தமானதே. திருப்பெருந்துறையில் ஆறு சபைகள் உள. இரண்டாம் பிரகாரத்தில் உள்ள மண்டபத் தூணொன்றில் குதிரைமேல் பெருமான் எழுந்தருளியிருக்கிறார். நரியைப் பரியாக்கிய பெருமானிவர்ந்த குதிரையோ நாலுகாற் பாய்ச்சலின் விரைவதாக அமைந்துள்ளது. இம் மண்டபத்தின் பாவுகல் கலைச் சிற்பங்கள் நிறைந்துள்ளது. கோயிலின் தூண் ஒவ்வொன்றிலும் நுட்பவேலைப் பாடமைந்த ஒவ்வொரு

செந்தமிழ்மணி
பொன். கிருஷ்ணபிள்ளை

மூர்த்தி உளது. காளிகாதேவி, நரசிம்மர், பிட்சாடனர், கரைக்கால் அம்மையார் அற்புதமாக அமைந்துள. ஒரு தூணில் கோதண்டபாணியின் மருகன் முருகன்தானே கோதண்டபாணியாகக் காட்சி தருகிறான். வேடன் சிற்பம், குறத்தியின் சிற்பம் நாம் வியந்து நோக்கும் வகையில் அதி உன்னதமாக அமைந்துள. நுட்பவேலைப் பாடுகள் அமைந்த தூண்களில் உள்ள சிற்பங்கள் திருப்பெருந்துறையை அதி அற்புத உயிர் வேலைப் பாடமைந்த கலைக்கருவூலம் என நம் கண்களுக்கு விருந்தளிக்கின்றன. திருப்பெருந்துறையை நினைக்கும்போது மணிவாசகரே நமக்கு முன் தோற்றம்தருகின்றார். பக்திப் பரவசப் பெருக்கில் ஆழ்ந்த மணிவாசகருக்கு இவ்வாலயத்திலுள்ள சிறப்புச் செப்புந் தரமன்று.

**உள்ளம் உருக்கும் உத்தம திருவாசகம்**

மணிவாசகர் திருவாசகம் மாணிக்கம் போன்று இருளோட்டி அருள் சுரப்பதற்குத் திருவாசகத்திற் பல உதாரணங்களுள. ஈண்டு ஒன்றை மாத்திரம் நோக்குவோமாக. அறிதற்கரிய ஒப்பிலா முழுமுதற்பொருள் குருவடிவாக உருத்தாங்கிக் குருந்தமரத் தண்ணிழலில் வீற்றிருக்கின்றான். பெரியவன் எளியவனாகத் தமக்காக வந்தருளிய பெருமையை நினைத்துருகுகிறார் அடிகளார். உருவின் நிழல் உருவை விட்டு நீங்காதிருக்கும் இயல்பினது. சிவ குரவன் திருவடியை அன்பரும் பிரிவரிய நிலையிற் பற்றுகிறார். அஃதொன்றே அடிகளாருக்கு என்றும் வெறுப்பற்றுப் பற்றக் கூடியதாயிருக்கிறது. குரு வந்தருளிய திருப்பெருந்துறையிற் திசையை ஆராமையோடு நினைக்கிறார் மணிவாசகனார். கடிய எலும்புமே மிக நொய்ய வொருளாய் எமக்கு நெஞ்சுருகுகிறது. இறை அன்பு சுரந்து ஆறுகப் பிரவாகிக்கிறது. ஐந்து பொறிகளின் அறிவு ஒன்றுபட்டு ஒரே முகமாகின்றன. இந்நிலையில் அடிகளார் நாக்கு "என்குடி முழுதாள வந்த தனிப் பெருந்தலைவனே" என்று தன்னை அறியாது கதறுகிறது. உருக்கத்தால் சொற்கள் தடுமாற மயிர் சிலிர்க்கிறது. கைகளிரண்டும் மொட்டுப் போற் கூம்ப இருதயம் விரிந்த மலராகிறது. கண்களிலிருந்தும் நுண் துளிகள் தைல ஒழுக்குப்போல் இடையறாது சொரிகின்றன. கெடாத அன்புடையாரைச் செழித்து வளரச் செய்யும் தாயல்லவா நீ?

"அருபரத் தொருவன்
அவனியில் வந்து
குருபரன் ஆகி
அருளிய பெருமையைச்
சிறுமையென் றிகழாதே
திருவடி யிணையைப்
பிறிவினை யறியா
நிழலது போல
முன்பின் ஆகி
முனியா தத்திசை
என்புநைந் துருகி
நெக்குநெக் கேங்கி
அன்பெனும் ஆறு
கரையது [illegible]ரள
நன்புல னொன்றி
நாதவென் றரற்றி
உரைதடு மாறி
உரோமஞ் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித்
திருதய மலரக்
கண்களி கூர
நுண்துளி அரும்பச்
சாயா அன்பினை
நாடொறும் தழைப்பவர்
தாயே யாகி
வளர்த்தனை போற்றி."

(திருவாசகம் போற்றித் திரு அகவல் 75—87 அடிகள்)

இறைவனே வலிந்து தமக்கு ஆலயம் அமைக்குமாறு பணித்த அருளாளர் கோயில்களைத் தொடர்ந்து நோக்குவோம்.

---

## பாரதி பாடல்களிற். . .

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாடல்களின் [illegible]த்தமான வடிவம் நமக்[illegible]த் தெரிய வேண்டும். அது இன்றைய காலகட்டத்தில் அத்தியாவசியமாகும். இறுதியாக ரா. அ. பத்மநாபன் அவர்களின் கூற்று ஒன்றுடன் இக் கட்டுரையை முடிக்க விரும்புகிறேன்.

"பழைய பத்திரிகைகளும் கையெழுத்துப் பத்திரிகைகளும் கல்வெட்டுக்களல்ல, அஜாக்கிரதையையும் கால வேகத்தையும் எதிர்த்து நிற்க. எளிதில் சேதப்பட்டு அழிந்து போகும் தன்மை வாய்ந்த அவைகளைக் காலத்தில் தேடிக் காப்போமானால் நாமும் பயனுறுவோம், எதிர்கால சந்ததிகளும் நம்மை வாழ்த்துவர். ஒரு முந்திய தலைமுறை பாரதியை அறியாது தவிக்கவிட்டதென அங்கலாய்க்கிறோம். அன்று பாரதிக்கு நேர்ந்தகதி இன்று அவரது எழுத்துகளுக்கு நேர்ந்து வருகிறது. இதற்கு இன்றையத் தமிழ்த் தலைமுறை சரியான வழிசெய்ய வேண்டாமா?"

சித்திரபாரதி என்ற நூலில அவர் பதினேழு வருடங்களுக்கு முன் எழுதியவை இன்றும் பொருத்தமாயுள்ளன. பாரதியின் பாடல்களையும் (ஏனைய எழுத்துக்களையும்) பவித்திரமாகச் சேகரிப்பதோடு, பாடபேதங்களையும் பழுதற ஆராய்ந்து உண்மைப்பாடங் காண்பது இன்றைய தலைமுறையினரின் தலையாய கடமையாகும்.

---

# அறிந்ததும் அறியாததும்

"மெய்யன்"

**வெறுப்பின் விளைவு**

தீமையை வெறுப்பவர்கள் நன்மையைப் பெறுவார்கள். நன்மையை வெறுப்பவர்கள் தீமையைப் பெறுவார்கள். அவை இரண்டையும் வெறுப்பவர்கள் நல் அமைதியைப் பெறுவார்கள்.

**ஒற்றுமை வேற்றுமை**

ஆற்றங்கரை மரக் குரங்கு ஒன்று ஆற்றோடு அடித்துச்செல்லும்போது, மற்ற மரக் குரங்குகளின் மனநிலை மிக அமைதியாக இருக்கும்; ஆனால், ஒரு மனிதன் மரணவெள்ளத்தால் அடித்துச் செல்லும்போது, மற்ற மனிதர்களின் மனத்திலே அம் மரக் குரங்குகளின் மனநிலையாவது காண முடிவதில்லையே.

**பண்புகளில் ஒன்று**

பகுத்தறிவு அற்ற பிராணிகள் தாம் தப்பித்து வாழ்வதற்காக, விடம், முள், பல், நகம், கொம்பு முதலிய பொருட்களைத் தம்முடன் என்றும் வைத்திருந்து பயன்படுத்திக்கொள்ளுகின்றன; ஆனால், மனிதன் தன்னைக் காத்து நலமுடன் வாழ்வதற்காகப் பெற்றுக்கொண்ட பகுத்தறிவை என்றும் முறையே பயன்படுத்திக்கொள்வதில்லை,

**பழகும் பண்பு**

நீ பிறருக்கு அதர்மத்தைச் செய்யும்போது உனது பெயரை மறைத்துக்கொள்ளாதே. தர்மத்தைச் செய்யும்போது உனது பெயர் என்றும் வெளிவராமல் பார்த்துக்கொள்.

**சிறந்தவழி**

நல்லவர்களை இந்த உலகம் மெச்சி மகிழ்ந்து போற்றிக் கொண்டாடுகின்றது; ஆனால், தீயவர்களை ஒருபோதும் அப்படிச் செய்வதில்லை. ஏனென்றால், தீயவர்களையும் நல்லவர்களாக்குவதற்காகவே.

**இனமும் குணமும்**

பூனையும் புலியும் ஒரே இனம். அப் பூனை புலியளவில் வளர்ந்தாலும் அது புலியின் குணத்தை என்றும்ம பெறுவதில்லை.

**சிறந்த களவு**

பகலில் பார்த்துவைத்து இரவில் திருடுபவரும் உண்டு. இரவில் பார்த்துவைத்துப் பகலில் திருடுபவரும் உண்டு. இவர்களிலும் மிகச் சிறந்த திருடர் யார் தெரியுமா? உடனே பார்த்து உடனே திருடுபவர்.

**ஒன்றிற் பல**

உனது மனம் ஒரு கண்ணாடிக்குச் சமானமானது. அந்தக் கண்ணாடியில் உன்னை நன்றாகப் பார்த்துக் கொள்ளலாம். அது உடைந்தாலும் பார்த்துக் கொள்ளலாம். ஒருவராக அல்ல; பலராக.

**பரந்த மனப்பான்மை**

எனக்காக நான் வாழுகின்றேன்; என் குடும்பம், என் உறவினருக்காக வாழுகின்றேன் என்று கூறும் நீ உலகத்திற்காகவும் வாழுகின்றேன் எனவும் கூறினாயா?

**குருட்டுத் தத்துவம்**

குருடருக்கு வழிகாட்டிகள் தேவை. வழிகாட்டிகள் குருடராக இருந்தால் அவர்கள் செல்லும் வழிகளும் குருடாக இருக்கும்.

'கலைக்கண்'
மாதப் பத்திரிகை
இதனை ஊக்குவிப்பது உங்கள் கடமையாகும்
தனிப்பிரதி சதம் 35
ஆண்டுச் சந்தா — ரூபா 5-50 } தபாற் செலவு உட்பட
ஆறுமாத சந்தா — ரூபா 3-00 }

# தெய்வீகம்

— சிற்பி —

அது ஒரு பிள்ளையார் கோயில். கேட்ட வரம் அருளும் கீர்த்தியுள்ள பிள்ளையார்—சித்தி விநாயகர்—கோலாகலமாக வீற்றிருக்கின்றார்.

காலைப் பூசை நடைபெறப்போகிற நேரம்.

குளித்து, தோய்த்துலர்ந்த வஸ்திரம் அணிந்து, திருநீற்றைத் திரிபுண்டரமாகத் தரித்து, பயபக்தியுடன் அங்கே வந்தான் குமரையன்.

கடந்த இரண்டு நாட்களாக அவனுக்கு ஒரு பெருங் கவலை; நெஞ்சிலே நீங்காத ஏக்கம்.

வானம் மூட்டங் கட்டியிருந்தது. கரு மேகங்கள் ஒன்றிரண்டு நெருக்கியடித்துக்கொண்டிருந்தன. "இன்னுஞ் சில மணி நேரத்தில் இறங்கி வருவோம்; நாடு முழுவதையும் வெள்ளக் காடாக்கி விடுவோம்" என்ற எச்சரிக்கை இடி யோசையாக ஒலித்தது.

பல ஆண்டுகளின் பின் இந்த முறைதான் குமரையனுடைய உப்புப் பாத்திகள் நன்கு விளைந்திருந்தன. இன்னும் நாலைந்து நாட்களுக்கு வெய்யில் உக்கிரமாக எறித்தாற் போதும். உப்பைக் கிளறி அள்ளிச் சேகரித்துக் கடைக்காரர்களுக்குக் கொடுத்து விடுவான். இது கால வரை அவன் பட்ட கடன் எல்லாம் தீர்ந்துவிடும்; கையிலும் தாராளமான பணம் மிஞ்சும்; அவனுடைய ஆசைக் கனவுகள் எல்லாம் நிறைவேறும்.

ஆனால், அதற்குள் மழை பெய்துவிட்டால்......?

"விக்கினங்களைத் தீர்க்கும் விநாயகரே! மழையைத் தடுத்துவிடுங்கள்; என்னைக் காப்பாற்றுங்கள்; உங்கள் மனம் குளிர உங்களுக்குப் பாலாலும், தேனாலும் பன்னீராலும் அபிஷேகம் செய்விப்பேன்" — அழுது தொழுது கெஞ்சி மன்றாடிக் கொண்டிருந்தான் குமரையன்.

சற்றுநேரத்தில், அங்கே வந்துசேர்ந்தான் முருகையன். அதே பக்திக் கோலத்தில்—குளித்து, தோய்த்துலர்ந்த வஸ்திரம் அணிந்து, திருநீற்றைத் திரிபுண்டரமாகத் தரித்துக்கொண்டு பயபக்தியுடன் வந்தான்.

அவனிடமும் ஒரு பெருங் கவலை; நெஞ்சிலே நீங்காத ஏக்கம்.

கோர வெய்யிலால் அவனுடைய நெல்வயல்கள் வரண்டுவிட்டன. பயிர்கள் வாடிச்சோர்ந்துவிட்டன. எப்போதோ பெய்திருக்கவேண்டிய மழை, இதுவரை அவனை ஏமாற்றியேவிட்டது. இரண்டு மூன்று தடவை வானம் இருண்டு மழைக்கோலம் காட்டியது உண்மைதான்; அவனும் மனம் மகிழ்ந்தது உண்மைதான்; ஆனால் அதெல்லாம் பொய்த்துவிட்டது.

இப்போதாவது மழை பெய்தாற் போதும். அவனுடைய பயிர்கள் செழிக்கும்; நெல்மணியாய்க் கொழிக்கும்; அவனுடைய இருண்ட வாழ்வுக்கு விடிவு ஏற்படும்.

ஆனால், இம்முறையும் மழை பொய்த்துவிட்டால் ..?

"விக்கினங்களைத் தீர்க்கும் விநாயகரே! மழையைக் கொடுத்துவிடுங்கள்; என்னைக் காப்பாற்றுங்கள். உங்களுக்குப் பாலாலும் தேனாலும் பன்னீராலும் அபிஷேகஞ் செய்விப்பேன்"—அழுது தொழுது கெஞ்சி மன்றாடிக் கொண்டிருந்தான் முருகையன்.

உள்ளே, மூலஸ்தான விக்கிரகத்துக்குத் தீபாராதனை நடைபெற்றுக்கொண்டிருந்தது. சர்வாலங்கார மூர்த்தியின் அழகு கண்களைப் பறிக்க, இருவரும் மானசிகமாகத் தத்தம் வேண்டுதல்களைச் சமர்ப்பித்துக்கொண்டும், நேர்த்திக் கடனை நினைவூட்டிக்கொண்டும் பயபக்தியுடன் நின்றனர்.

பூசை முடிந்து, பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டு கோவிலைவிட்டு வெளியேறுமுன், மீண்டும் ஒரு தடவை விநாயகரைப் பார்த்தனர்.

ஆழக்கடலின் அமைதியுடன், அனைத்தையும் அறிந்துகொண்டுள்ள நிறைவுடன், அனுதினமும் கடைப்பிடிக்கும் தெய்வீக மௌனத்துடன் ஆடாமல் அசையாமல், அழகொழுக வீற்றிருந்தார் ஆனைமுகன்.

இருவரும் கோயிலிலிருந்து புறப்பட்டனர்; வானத்தைப் பார்த்தனர்.

வானம் சற்று வெளித்தாற்போல் காட்சியளித்தது.

முருகையனை ஒரு வெற்றிப் பார்வை பார்த்தான் குமரையன். சிந்தனையில் ஆழ்ந்தபடி தலையைக் குனிந்துகொண்டான் முருகையன்.

தொடர்ந்து அவர்கள் நடந்துகொண்டிருந்தனர்; அடிக்கடி வானத்தைப் பார்த்தனர்; தம் குலதெய்வமான அந்தச் சித்திவிநாயகரை மானசிகமாக வேண்டிக்கொண்டிருந்தனர்.

❋

ஊரின் ஒருகோடியில் குமரையனின் உப்புப் பாத்திகளும், மறுகோடியில் முருகையனின் நெல்வயல்களும் இருந்தபோதிலும் இருவரின் வீடுகளும் ஊரின் நடுமத்தியில், அருகருகே இருந்தன. இருவரும் எதிரிகள் அல்லர் என்றாலும், அவர்களை நண்பர்கள் என்றும் சொல்லமுடியாது. அவர்கள் ஈடுபட்டிருந்த தொழில்களின் தன்மையால், இருவரிடமும் ஒருவித வேற்றுமையுணர்வு காணப்பட்டது என்பதுதான் சரி.

வீடு கிட்டிவிட்டது.

குமரையன் நடையில் ஒரு மிடுக்கு; வேகம். முருகையனின் நடையில் ஒரு சோர்வு; தயக்கம்

தத்தம் வீடுகளுக்குள் நுழைவதற்குமுன் மீண்டும் ஒரு தடவை வானத்தை அண்ணாந்து பார்த்தனர்.

வானம் மீண்டும் இருண்டுவிட்டது. கலைந்திருந்த கருமேகங்கள் ஒன்றுசேர்ந்துவிட்டன. இப்பொழுது இடியில்லை; மின்னலில்லை. ஆனால் வானத்திற் பொத்தல் ஏற்பட்டதைப் போல், மழை சோனாவாரியாகப் பொழியத் தொடங்கிவிட்டது.

திகைத்துவிட்டனர் இருவரும். திடீரென்று எப்படி ஏற்பட்டது இந்த மாற்றம்?

ஊழிப் பெரு வெள்ளம் வந்துவிடுமோ என்று பயப்படுமளவுக்கு அன்றைய பகற்போது முழுவதும் ஓயாமற் கொட்டிக்கொண்டிருந்த மழை, நன்கு இருட்டியதுதான் ஓய்ந்தது.

குமரையனிடமிருந்த நம்பிக்கையெல்லாம் போய், ஏமாற்றமும் விரக்தியும் எரிச்சலுமே மிஞ்சின.

இத்தனை காலமும் அந்தச் சித்திவிநாயகரை வழிபட்டுத்தான் என்ன பயன்? ஏன், அன்று காலையிற்கூட அதே விநாயகரை அவன் மனமுருகி, மெய்யுருகி வேண்டவில்லையா?

கடவுளா அவர்?

இல்லை கல், வெறுங்கல்.

கண்ணோ கருணையோ அற்ற அந்தக் கருங்கல்லை நெஞ்சார, நாவாரத் திட்டிக் கொண்டிருந்தான் குமரையன்.

முருகையனின் ஏக்கமும் நீங்கியபாடில்லை. மழை வேண்டும் என்று தவங் கிடந்ததும், விநாயகரை வேண்டியதும் உண்மைதான. அளவாக மழை பெய்தாற்றான் அவனுக்கு நன்மை. அதிகப்படி பெய்தால் பயிர் அழுகி நாசமாகிவிடும். மழை இருட்டான படியால் வயற் பக்கஞ் சென்று பார்த்து வரவும் முடியவில்லை. கலையாத கவலையுடன் வீட்டிற்குள்ளேயே குடங்கிக் கொண்டு கிடந்தான்.

## சிறுகதை

விடிந்தது. வானமும் நன்கு வெளித்துவிட்டது.

உப்புப் பாத்திகளை எட்டியும் பார்க்கவில்லை, குமரையன். போய்ப் பார்த்தாற்றான் நிலைமை தெரியுமா?

முருகையன் வயற்பக்கம் ஓடோடியும் சென்றான். நல்ல காலம். வாடிக்கிடந்த பயிரெல்லாம் இப்போது செழித்துச் சிலிர்த்துத் தலையை நிமிர்த்தி நின்றன. சற்று மேட்டுப் பாங்கான அவனுடைய வயலில் அளவான நீர்தான் நின்றது. அவ்வளவும்போதும். இம்முறை அவனுக்கு நல்ல விளைச்சல் கிடைக்கும்.

குமரையனின் நெஞ்சு புகைந்துகொண்டிருக்க, முருகையன் தினமும் வயற் பக்கம்சென்றுவந்தான். நெற்பயிர்கள் பொத்தி தள்ளியதை, வெள்ளம் சிறிது சிறிதாக வற்ற நெல் மணிகள் மெல்ல மெல்ல முற்றிக் கொண்டு வருவதைப் பெருமையுடனும் நிறைவுடனும் அவதானித்துக் கொண்டு வந்தான் அவன்.

ஆயிற்று. அறுவடையும் முடிந்துவிட்டது. முருகையன் எதிர்பார்த்ததைவிடப் பல மடங்கு அதிக விளைச்சல் கிடைத்தது. வேண்டிக் கொண்டபடி விநாயகர் மனம் குளிர அபிஷேகம் செய்வித்தான்; ஏழைகளுக்கு அன்னதானமும் செய்தான்.

அடுத்த விதைப்புக்கும், ஆண்டு முழுவதும் தன் குடும்பத்துக்குப் போதுமானதுமான நெல்லை வைத்துக்கொண்டுமிகுதியைவிற்றுவிடுவது அவன் வழக்கம் ஆனால் இந்த முறை மேலதிகமாகவும் சில நெல் மூடைகளை அவன் வைத்திருந்தான்.

❋

நாளிதழ் உதிர்ந்தது. மாதங்கள் கருகின. ஆண்டொன்று வரண்டு உருண்டது.

அடுத்த விதைப்புக் காலமும் வந்துவிட்டது. ஆனால் வானம் வெளிறிக் கிடந்தது. மழையைக் காணவில்லை. எங்கும் வரட்சி; ஒரே வரட்சி. புல் பூண்டுகள் கருகிச் செத்தன. அகோர வெய்யிலில் மனிதர் புழுவாகத் துடித்தனர்.

முருகையனால் வயலுக்குள் இறங்கவே முடியவில்லை. நிலமெல்லாம் இறுகி வைரம் பாய்ந்து கிடந்தது.

இந்த நாட்டில் மட்டுமல்ல, உலகம் முழுவதிலும் இதே வரட்சி நிலைதான் என்று பேசிக்கொள்ளப்பட்டது.

பசி — பட்டினி — பஞ்சம் — பற்றுக்குறை — மரணம — இவை பற்றிய பயங்கர நினைவுகள் மக்களை வாட்டி வறுத்தெடுத்தன.

ஆனால் குமரையன் மட்டும் குதூகலமாக இருந்தான். அவனுடைய உப்புப் பாத்திகள் பூத்துக் கிடந்தன. இத்தனை வருட வாழ்க்கையில் இப்படியொரு செழிப்பான விளைச்சலைக் காணவேயில்லை. அவை வெறும் உப்புப் பாத்திகள் அல்ல; உப்பு மலைகள்; பணக் குவியல்கள்.

ஊர் முழுவதும் பஞ்சத்தில் வாடிக், கண்ணீரில்நடுங்கிக்கொண்டிருந்தது. ஆனால் அதைப்பற்றி விசாரிக்கவோ கவலைப்படவோ குமரையனுக்கு நேரமில்லை. உப்பு மலைகளை உடைப்பதிலும் மூட்டைகளாகக் கட்டி வீட்டிற்குள் பத்திரமாக வைப்பதிலும் அவனுடைய பொழுது போய்க்கொண்டிருந்தது.

எந்தச் சக்தியாலும்—எந்தக் கடவுளாலும், அவன் இலட்சாதிபதியாவதை இனித் தடுக்க முடியாது; தடுக்கவே முடியாது.

அவனுடைய பிரச்சினைகள் எல்லாம் இனித் தீர்ந்துவிடும்; பஞ்சம் அவனைக் கண்டு பறந்தோடிவிடும்; நீண்டகாலமாக அவன் ஆசைப்பட்டுக்கொண்டிருந்தபடி ஒரு காரும் அவனுக்குச் சொந்தமாகிவிடும்; அவன் யாருக்குமே பணியாமல் தலைநிமிர்ந்து செல்லலாம் ........

நாட்கள் சுழன்றன. ஆனால் குமரையன் எதிர்பார்த்தபடி எதுவுமே நடக்கவில்லை. உப்புமூட்டைகள் அப்படி அப்படியே கிடந்தன. ஒருநேரக் கஞ்சிக்கே மக்கள் ஆலாய்ப் பறந்துகொண்டிருக்குமபோது இவ்வளவு பெருந்தொகையானஉப்பைக் கொள்வனவு செய்ய யார் வரப்போகிறார்கள்?

நாளாக நாளாக அவனுடைய நம்பிக்கைக் கோட்டைகள் தகர்ந்துகொண்டே வந்தன; ஆசைக் கனவுகள் சிதறிக்கொண்டே வந்தன.

அரைவயிற்றுக்கும் கால் வயிற்றுக்கும் சாப்பிட்டுங்கூட அவன் வைத்திருந்த அரிசி விரைவில் தீர்ந்துவிட்டது. அடுத்தவேளைச் சோற்றுக்கு என்ன செய்வதென்றே தெரியாத ஏக்க நிலை. இரண்டொரு தடவை பச்சைத்தண்ணீர் மட்டும் வயிற்றை நிறைத்தது.

ஊரிலுள்ள பலர் முருகையனைத் தேடி வந்தனர் தேவையும் தகுதியும் அறிந்து, சிலருக்குக் கடனாகவும் சிலருக்குத் தானமாகவும் நெல் கொடுத்தான் முருகையன்.

ஆனால் முருகையனிடம் உதவிபெறுவதற்குக் குமரையனின் தன்மானம் விடவில்லை. அதுமட்டுமல்ல, தான் யாருடைய தயவையும் எதிர்பார்க்கவில்லை என்பதையும் அடிக்கடி வாய்விட்டுச் சொல்லிக்கொண்டிருந்தான் அவன்.

பிள்ளையார் கோயில் மணி கேட்கும்போதெல்லாம் அவனுடைய ஆத்திரம் பீறிட்டுக் கிளம்பும். தானும் தன் குடும்பமும் இங்கே பட்டினியால் செத்துக் கொண்டிருக்க அந்தக் கருங் கல்லின்மேல் பாலையும் தேனையும் ஊற்றி வீணாக்குகிறார்களே!

இந்த நிலையில, மழை பெய்யவேண்டும் என்பதற்காக அந்த விநாயகருக்கு விசேட அபிஷேகமும் பொங்கலும நடைபெறப் போவதை அறிந்தபோது அவன் எரிமலையானான். அன்னதானத்துக்குத் தேவையான உப்பை அவனிடம் நன்கொடையாக வாங்க வந்தவர்களை வாய் கொண்ட மட்டும் திட்டித் தீர்த்தான்.

"உந்தக் கல்லுக்கு மேலை தண்ணியை ஊத்தினாப் போலை மழை வந்துவிடுமோ? இந்த இருபதாம் நூற்றாண்டிலை இப்படிஒருமோட்டுத்தனமான வேலையைச் செய்யிறதைக் கேள்விப்பட்டால் மற்ற நாட்டுக்காரர்கள் எங்களைப் பற்றி என்ன நினைப்பினம்?"

"அவை நினைக்கிறதைப் பற்றி நாங்கள் ஏன் கவலைப் படவேணும்? நாங்கள் எல்லாரும் ஒரே மனதாகக் கடவுளை வேண்டினால் அவர் நிச்சயம் கண் திறப்பார் முந்தி இரண்டு மூன்று தடவை கொடிய வரட்சி வந்தபோது இபபடித்தானே நாஙகள் செய்தம்? மழை பெய்தது தானே ...?"

சரி, சரி எதையாவது போய்ச் செய்து துலையுங்கோ... ஆனால் என்னட்டை மட்டும்எந்தவிதமான உதவிக்கும் வரவேண்டாம் எனகரு உதிலை நம்பிக்கை இல்லை"

"ஊரிலையுள்ள எல்லாரும் ஒரு மனதாக ஒத்துச் செய்யிற காரியம் இது. நீ மட்டும் இப்பிடி எதிர்த்து நிக்கிறது அவ்வளவு நல்லாயில்லை அண்ணை" என்று சொல்லிக்கொண்டு, போதியளவு உபபைத் தாமாகவே எடுத்துக்கொண்டு விரைந்தார்கள் தண்டலகாரர்கள்.

குமரையனாற் பொறுக்க முடியவில்லை அவனுடைய உப்பு எக்கேடு கெடடாலும் பரவாயில்லை. ஒரு சதமேனும் வராவிட்டாலும் அவன் கவலைப்படப் போவதில்லை. ஆனால் ஒரு சிறிய உப்புக் கட்டியென்றாலும் அந்தக் கோவிற் காரியத்திற்குப் பயன்படக் கூடாது. அதை அவன் தடுத்தே ஆகவேணடும்.

தான் கோயிலுக்குச் செல்லப்போவதைச் சொல்வதற்காக மனைவியை அழைத்தபோதுதான் வேறொரு உண்மை அவனுக்குத் தெரியவந்தது. அவ

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

# பாவேந்தர் பாடல்கள்

பாவேந்தர் பாடல்களில் அவர்தம் முத்திரை பற்பல இடங்களில் விழுந்திருக்கக் காணலாம். யார் இந்தப் பாவேந்தர்? அவர் கொள்கை என்ன? அவர் பார்வை எத்தகையது? என்பனபோன்ற கேள்விகளுக்கு விடை அம் முத்திரைப் பாடல்களில் விளங்கலாம்.

பேராசிரியர் இரா. தில்லைக்கோவிந்தன்
தமிழ்த்துறைத் தலைவர்
அரசினர் கலைக் கல்லூரி, உதகமண்டலம் – 2

"இருபதாம் நூற்றாண்டின் தமிழ்க் கவிதைக்கே இன்னும் பாரதிதாசன் தலைவனாக விளங்குகிறான்: அவனுக்குப் பின் அந்தத் தலைமைப்பீடத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடிய தகுதி இன்னும் யாருக்குமே ஏற்படவில்லை" என்ற கூற்று,[1] கவிதை ஆராய்ச்சி உலகிலே விருப்பு வெறுப்புக் காரணமாக எழுப்பப்பட்டதாகத் தோன்றுகிறது. உண்மை என்னவெனில், "பாரதி இப்புதிய நூற்றாண்டின் விடிவெள்ளி போல்வாரெனில், பாரதிதாசன் அதன் இளவள ஞாயிறு எனலாம். பாரதிதாசன் பழமை தவிர்த்த மட்டிலுமோ, பாரதியைப் பின்பற்றியதில் மட்டிலுமோ அவர் பெருமை அமைந்துவிடவில்லை. அவருடைய இன்றைய நூல்கள் பாரதியாரின் எல்லையைக் கடந்து பல்வகையினும் விரிவு பெற்றவையாய் விளங்குகின்றன,"[2] ஆம். இதில் ஏதும் ஐயமில்லை.

தம்மைவிட ஆற்றலும் தெளிவும் படைத்த கவிதைப் பரம்பரையைப் பாவேந்தர் தலைமையில் ஆக்கும் திறன், பாரதிதாசனார்க்குத் தலைவராகவும், கவிதை ஆசானாகவும் விளங்கிய பாரதிக்கு அமைந்திருந்தது.

"தம்மின்தம் மக்கள்
அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது"

என்றன்றோ வள்ளுவப் பெருந்தகை வாய்மொழிந்துள்ளார். பாரதி தொட்டவற்றைத் துலக்கியும், தொடாதனவற்றை அட்டியின்றி எடுத்தெடுத்து விளக்கியும் பாவேந்தர் பாடல்கள் பாடியுள்ளார். பல்வேறு மாறுபட்ட கருத்துக்கள் அவர் பாடல்களிற் காணப்படும். இருப்பினும், விருப்பு வெறுப்புக் கருதாது, ஏ. சி. பிராட்லியின் கூற்றினைக் கருத்திற் கொண்டு, பாவேந்தரின் பாடல் திறன் காணும் பாங்கு ஆராய்ச்சியாளர்க்கு நனி வேண்டப்படுவதாம். ஏ. சி. பிராட்லி கூறுவார்; கவிதையில் எது பாடப்பட்டிருக்கிறது என்பது கேள்வியன்று; எவ்வாறு ஒன்று கூறப்படுகிறது என்பதே கவனிக்கத் தக்கதாகும். (The 'what' is indefferent to poetiy; it is the 'how' that matters much.)

மேற்கண்ட அடிப்படையில் ஆராய்வார், பாவேந்தர் பாடல்களிற் சொல்லப்பட்ட கருத்தில் புரட்சியும், அதனை வெளிப்படுத்தும் கவிதை அமைப்பில் புரட்சியும், வருணிக்கப்படும் அழகில் புரட்சியும், அடுக்கடுக்காகக் காண்பார். கதை, கவி, கருத்து, இன்பம், எழில், கொள்கை, குறிப்பு இவ்வொவ்வொன்றிலும் சுவை கண்டு, பாவேந்தர் பாடலைப் பன்முறை படித்தும் பாடியும் மகிழலாம்.

பாவலர்கள், தமது கவிதைகளில், தம் இலச்சினை தோன்ற, தம் ஆளுமை (personality) விளங்க வைப்பர்: பாவேந்தர் பாடல்களில் அவர்தம் முத்திரை பற்பல இடங்களில் விழுந்திருக்கக் காணலாகும்: யார் இந்தப் பாவேந்தர்? அவர் கொள்கை என்ன? அவர் பார்வை எத்தகையது? என்பன போன்ற கேள்விகளுக்கு விடை, அம் முத்திரைப் பாடல்களில் விளங்கலாம்.

## 'யார் இந்தப் பாவேந்தர்'?

"நல்லுயிர் உடம்பு செந்தமிழ்
மூன்றும்
நான் நான் நான்"

என விண்ணூர்ந்து முழங்கும் பாவேந்தர், பைந்தமிழாரவம் மீக்கூரப் பெற்ற பாவலர் ஆவர். தமிழ் என்றால் பாவேந்தர் பாவேந்தர் யார் என்றால் தமிழின் நிமிர்ந்த உருவம் எனலாம். தமிழைச் சற்று விலக்கிவிட்டு, [illegible]னகசுப்பு இரத்தினம் என்ற பாரதிதாசனை நம்மால் அறிதல் இயலாதே. தமிழ் உணர்வுக்குக் கவிதை உலகிலே பாவேந்தர் பாக்கள் முன்னிற்பன. தமிழ் பற்றி யார் கூறிய சிறப்புரைகளாயினும்சரி, அவற்றினைப் பாவேந்தரே மொழிந்திருத்தல்கூடும் என்ற குறிப்பு, இளைஞர் உலகிலே இருத்தல் கண்கூடு. 'இருந்தமிழே; உன்னால் இருந்தேன்; இமையோர், விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்'[3] எனப் பாரதிதாசன் கூறுகிறார் என்றன்றோ மாணாக்க இளைஞன் எழுதத் தலைப்படுகிறான். அந்த அளவிற்குத் தமிழ் உணர்ச்சி தலை[illegible]கறப்பட்ட தமிழ்க்கவிதைகளில் எல்லாம் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனைக் கண்டுபிடிக்கும் வேட்கை, இளைஞரிடம் கனல்விட்டு மிளிர்கின்றது.

தமிழர் வாழ்வும் வளமும் மங்காத தமிழ் என்று சங்கம் முழக்கினார் பாவேந்தர். தமிழ் உணர்வு உள்ளத்தோடும், வாழ்வோடும் ஒன்றிக் கலந்த ஒன்றாகவே பாவேந்தர் கருதினார். 'அந்தோ அந்தோ, பழைய நைந்த தமிழரோடு நானிருந்தேனே' என அவர் இரங்குகையில் தமிழ்உணர்வு முதிரப்பெறாத தமிழருக்காக அவர் வருந்தும் வருத்தம் அளவிடற்கரியது. அவர்தம் பாடல்களில், கதைமாந்தர் கூற்றாக, தமிழ்உணர்வு மீக்கூரப் பெற்ற இடங்கள் பல உண்டு.

"காதல் ததும்பும் கண்ணாளன் தனைக்
கோதை ஒருத்தி கொச்சைத்
தமிழால்
புகழ்ந்தாள் என்று பொறாமல்
சோர்ந்து வீழ்ந்தான்"

என்ற பகுதியும் (முதல் தொகுப்பு)

"அமுதென்று சொல்லுமிந்தத்
தமிழ்என் ஆவி
அழிவதற்குக் காரணமாய்
இருந்ததென்று
சமுதாயம் நினைத்திடுமோ?"

(முதல் தொகுப்பு; 'புரட்சிக் கவி') என்ற இடமும்.

"எனையீன்ற தந்தைக்கும்
தாய்க்கும் மக்கள்
இனமீன்ற தமிழ்நாடு
தனக்கும் என்னால்
தினையளவு நலமேனும்
கிடைக்கு மென்றால்
செத்தொழியும் நாளெனக்குத்
திருநா ளாகும்"

(பாண்டியன் பரிசு) எனவரும் பகுதியும்,

"அன்பிலா நெஞ்சில்
தமிழில் பாடி
அல்லல் நீக்க மாட்டாயா?"

(இசையமுது) என்ற இடமும் ஒரு சில எடுத்துக்காட்டுப் பகுதிகள் ஆகும். விரிவஞ்சி மேற்கண்ட ஒரு சிலவே காட்டப்பட்டன. நம் புரட்சிக் கவிஞர் தம் நேர்க்கூற்றாகவே தமிழ்க்கனல் கொப்புளிக்கும் பாடல்கள் இயற்றி, அவற்றில் தம் முத்திரை நனி விளங்க வைத்துள்ளார். 'உடல் மண்ணுக்கு, உயிர் தமிழுக்கு' என வாழ்ந்த பாவேந்தர்,

அந்த அளவிற்குப் பாவேந்தர் உயிரோடு உயிராகத் தமிழ் உணர்வு ஒன்றிக் கலந்தது. அதனைப் பின்வரும் முத்திரைப் பாடல் தெரிவிக்கின்றது.

"கனியிடை ஏறிய சுளையும்
— முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும்
— காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும்
— தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியென [illegible]பேன் எனினும்
— தமிழை
என்னுயிர் என்பேன்
கண்டீர்!"[4]

## பாவேந்தர் பார்வை எத்தகையது?

ஒரு பொருளை அல்லது ஓர் இயற்கைக் காட்சியைச் சாதாரண மனிதன், ஒருவன் பார்க்கும் பார்வைக்கும், கவிஞன் ஒருவன் பார்வைக்கும் நிரம்ப வேறுபாடுகள் உண்டு. முன்னது ஊனக் கண் பார்வையாயிருக்க, பின்னது இதயக் கண் பார்வையாக அமைந்து இலங்குகிறது. அப்பார்வையில் சாதாரண கண்களுக்குப் புலனாகாத அதிசய உண்மைபடுகிறது. கண்டதைக் கண்டபடியே கூறாமல், அதிலேதான் காண நினைத்ததைக் கட்டியுரைப்போன் கவிஞன் ஆவான். உவமை தற்குறிப்பேற்றல் முதலான அணிகளின் துணைகொண்டு மொய்த்த மனக் கருத்தை முழுமையாகக் கவிதையில் ஏற்றி அழகு செய்து, நிகழ்ச்சியை வியந்து கூறும் இடத்தில், கவிஞனின் திறம் பெறப்படுகிறது. இயற்கைக் கவிதைகள் இத்திறத்தன.

இயற்கை எழிலினை, அதனால் உண்டாம் இன்பத்தினை, பாட்டிலே வடித்து, அவற்றிலே ஒரு பெரிய திருப்பத்தை ஏற்படுத்திய பெருமைக்கு உரியராகப் பாவேந்தர் விளங்குகிறார். நிலா எழிலைப் பாடவந்த கவிஞர்,

"நீலவான் ஆடைக்குள்
உடல்ம றைத்து
நிலவென்று காட்டுகிறாய்
ஒளிமு கத்தை
கோமுழு தும்காட்டி
விட்டால் காதற்
கொள் ளையிலே
இவ்வுலகம் சாமோ?"

என்றெல்லாம் வியக்கின்றார். இவ்விடத்தில் 'அழுக்குத் துணிக்குள்ளே அறத்தொடு பிணைந்திருக்கும் ஆருயிர்' கொண்ட பாட்டாளிக ளைக ளோடும், தன் கவிதை நெஞ்சமோடும் நிலவினைக்கண்ட பாவேந்தர் அதன் இன்பம் இன்னதென எடுத்துரைக்கின்றார்.

"நித்திய தரித்திரராய்
உழைத்து ழைத்துத்
தினைத்துணையும் பயனின்றிக்
களைத்த மக்கள்
சிறிதுகூழ தேடுங்கால்,
பானை ஆரக்
கனத்திருந்த வெண்சோறு
காணும இன்பம்
கவின்நிலவே உனைக்காணும்
இன்பந் தானோ"

என அவர் எடுத்துரைக்கையில், உழைப்பாளர் உழைப்பின் அருமையும், அதனால் விளையும் பயனின் எளிமையும், அவ்வுழைப்பாளர்க்குத் திடீர் என உண்டாம் மகிழ்வின் தேக்கமும் எல்லாம் தெளிவாகப் புலப்படுத்தப் படுகின்றன.

கொடுமை கண்டு சீறும் குணம் படைத்த பாவேந்தர், சமுதாயத்தின் அடித்தளத்தில் வஞ்சிக்கப்பட்டுக் கிடக்கும் சாமானிய மக்களுக்காக வாதாடும் கவிஞர்; அச் சமுதாயத்தின் மாட்டுத் தமக்கு இருக்கும் பரிவுணர்வை, வெளிப்படுத்தச் சமயம் கிடைக்கும் போதெல்லாம், அவர் முந்தி நிற்கிறார். இயற்கை அவர்க்கு அவ்விடத்தில் பெரிதும் வாய்ப்பும் இடமும் தந்துதவியது. சோலைகளைப் பாடவந்த இடத்தே அவர் துடிப்பொடு கேட்கின்றார்.

"சித்திரச் சோலைகளே
உமை நன்கு
திருத்த இப் பாரினிலே—
முன்னர்
எத்தனை தோழர்கள்
ரத்தம் சொரிந்தனரோ உங்கள் வேரினிலே?'

'கைவருந்தி உழைப்பவர் தெய்வம்' என்பார் பாரதியார். அந்தத் தெய்வங்களின் செயலிலே திருந்திய அழகைக் கண்டு பாவேந்தர் வியந்துள்ள இடங்கள் பற்பல:

'அடடே, செந்தோட்
புறத்தினிலே கலப்பையுடன்
உழவன் செல்லும்
புதுநடையில் பூரித்தாள்,
'நாரெடுத்து
நறுமலரைத் தொடுப்பானின்
விரல் வளைவில்
நாடகத்தைச் செய்கின்றாள்'[5]

எனவரும் வரிகள் சில எடுத்துக்காட்டுகள்.

இந்த அளவு பீடிகையோடு, இந்தப் பகுதியைத் தொடங்கியதற்கான காரணம் பாவேந்தர் இதயப் பார்வை எங்கெங்கே விழுகிறது? அந்தப் பார்வையில் பட்ட விசித்திரம் யாது? என்பதை ஆராய்வதற்கே, ஆம். 'இரக்க முண்டாக்கித் தம் ஆவியில் வந்து கலந்த

(தொடர்ச்சி 7ஆம் ப்க்கம்)

---

## காற்றுடி

சேரன்

காற்றுடி ஒன்று ககனத் தெதிர்த்தவண்ணம்
விருப்பாய் நின்று விரைந்து சுழல்கிறது!

கீற்றாய் இணையாய்ப்
பலவாய்ப் பயிர்நடுவே
வேற்றடி போற்பாயும்
பறவை இனங்களையே
செற்றுக் கலைப்பதற்காய்க்,

காற்றுடி ஒன்று ககனத் தெதிர்த்தவண்ணம்
விருப்பாய் நின்று விரைந்து சுழல்கிறது!

மாரி கடுங்கோடை
குளிர்,கூதல் வேனிலென
நாட்கள் பலவாக
மாறி நகர்ந்தாலும்
வாரி வழங்காத
சேரி உழவனிடம்

காற்றுடி ஒன்று ககனத் தெதிர்த்துநின்று
விருப்பாய்ச் சுற்றி விரைந்து சுழல்கிறது!

காற்றுடி வீசிப்
பயன்கள் விளைத்ததனால்
பூத்துக் குலுங்கிக்
கனிந்த பயிரினத்தைச்
சூடாடிப் பின்னர்
விளைவும்பெற் றுய்ந்தவனின்

காற்றுடி ஒன்று ககனத் தெதிர்த்தவண்ணம்
விருப்பாய் நின்று விரைந்து சுழல்கிறது!

வேலை முடிந்து —
பயிர்விளைவும் பெற்றவுடன்
காற்றுடியை உழவன்
கழற்றி எறிந்துவிட்டான்.
காற்றுடி தன்பாட்டில்
கொல்லையிலே கிடக்கிறது!

இற்றைவரை அங்கு உழைத்துக் களைத்துவிட்டு
உக்கி உருக்குலைந்து
ஓடாய்க் கிடக்கிறது!!

# ஆங்கிலப் புலமை

## 7. மில்ரன் காலத்து வேறு புலவர்கள்

சேக்ஸ்பியர் இறப்பதற்கு எட்டு ஆண்டுகளுக்கு முன்னரே மில்ரன் பிறந்து விட்டார். மில்ரன் கண்ணொளியிழந்து ஒடுங்குவதற்கு முன்னரே வேறுபல புலவர்கள் தோன்றிவிட்டார்கள். அவர்கள் வெவ்வேறு சூழலில் வளர்ந்து வந்தார்கள். அவர்கள் பல துறைகளிலும் மேம்பட்டு விளங்கினர்கள். அவர்கள் அக்காலத்தில் நிலவிய பலவகைத் துன்பங்களையும் சகித்துக்கொண்டு, புதிதாக வளம் பெற்றுயர்ந்து வந்த தங்கள் மொழிக்குத் தம்மாலான தொண்டு செய்து வந்தார்கள்.

அக்காலத்துப் புலவர்களுள் சாமுவேல் பட்லர் என்பார் ஒருவர். அவர் 1612ஆம் ஆண்டுமுதல் 1680ஆம் ஆண்டு வரை வாழ்ந்தவர். மில்ரன் கடுந் தூய்மைப் போக்கில் ஊறியிருந்தாற்போல, பட்லர் அப்போக்கினை அறவே வெறுத்திருந்தார். எனவே அவர் கடுந்தூய்மையாளரை நையப்புடைப்பதற்கு நையாண்டிக் கவிதையே சிறந்த வழியெனக் கண்டு அங்கதச் செய்யுள்களை ஆக்கி வந்தார். அவர் செய்த நையாண்டிக் கவிதைகளில் 'ஹூடிபிருஸ்' என்னும் நூல் தலைசிறந்ததாகும். அந்நூலை அப்பாவலர் மூன்று பாகங்களில் வெளியிட்டார். அந்நூல் 'டொன் குவிக்சோட்' என்னும் நையாண்டி நூலைப் பெரிதும் ஒத்திருப்பதாகும்.

பட்லர் தமது நூலில் பிரபு ஒருவரின் காதல் தோல்விகளையும் போலித் தூய்மையாளரின் கபட நடிப்புக்களையும் கிண்டல் செய்யும் தனியழகு மிகவும் நயமாகவுள்ளது. 'கடுந் தூய்மையாளர் மூக்காலே தெய்வகீதம் பாடுபவர் என்றும், உணவுப் பிரியர்கள் என்றும் கூறுவர். கடுந் தூய்மையாளரின் மனம் போன போக்கில் திருத்தப் படுவதற்காகவோ சமயநெறி ஆன்றோர்களால் வகுக்கப்பட்டது, தூய்மையாளர் இறைவனைப் பொருட்படுத்தாமல் நேர்மாறான வழிகளிலேயே தம் வழிபாடுகளைச் செய்பவர்' என்றெல்லாம் பட்லர் கிண்டல் செய்யும் தனியழகு சுவையாக அமைந்துள்ளது.

### அறிஞர் க. சி. குலரத்தினம்

இந்நூல் மிகநீளமாய் அமைந்துள்ளதால் வாசகர் பொறுமையை இழக்கவேண்டியும் இருக்கிறது, எனினும் செய்யுளமைதியும், விவேகத் துடிப்பும் கிளர்ச்சியுடைமையும் வாசகர் மனசுக்குப் பெருவிருந்தாய் உள்ளன.

பட்லரின் நோக்கம் கடுந் தூய்மைக் கோட்பாட்டை நையாண்டி செய்து அழித்துவிடுதலேயாம். அவர் நூலை இரண்டாம் சாள்ஸ் மன்னர் வெகுவாக விரும்பிப் படிப்பது வழக்கம் என்றும் அரண்மனையில் மன்னனைச் சார்ந்தவர்கள் அதனை நன்கு சுவைத்து வந்தார்கள் என்றும் கூறுப. அக்காலத்துப் பொதுமக்களின் மனநிலையை அந்நூல் நன்முக எடுத்துக்காட்டியது என்றும், அது அக்காலத்து நூல்களில் தலைசிறந்ததாக நிலவியது என்றும், பெப்சிஸ் தமது நாட் குறிப்புக்களில் எழுதியுள்ளார். அந்நூலை வெகுவாக ரசித்த கலாநிதி யோண்சன் ஆங்கில மொழி அழியும் வரை பட்லரின் பெயர் அழியமாட்டாது என்று கூறியுள்ளார்.

பட்லரின் வாழ்க்கை வரலாற்றைப் படித்துக் கொண்டு போகும்போது சுவையான தகவல்கள் கிடைக்கின்றன. அவர் என்னதான் நிகழ்ந்த போதிலும் பொய்ம்மையாளரைப் பாடாத பெற்றிவாய்ந்தவர். நாட்டுப்பற்று, மொழிப்பற்று, சமயப்பற்று அதிகமுள்ளவர். இயற்கைக் காட்சிகளையும் இனிய கோட்பாடுகளையும் இலகுவாகப் பாடும் அமைதியுள்ளம் கொண்டவர். மில்ரன் காலத்துப் பிறபுலவர்களைக் கூறும்போது இலக்கிய வரலாற்று ஆசிரியர்களுக்கு ஒரு சிக்கல் உண்டாகிறது. உண்மையில் அவர்களை மில்ரன் காலத்தவர் என்பதா, அன்றி டிறைடன் காலத்தவர் என்பதா என்பதே அப்பிரச்சினையாகும்: உண்மையில் டிறைடனும் பதினேழாம் நூற்றுண்டுக்குரிய பாரிய கவிஞனேயாம்.

முடியாட்சி மீண்டும் அமைக்கப்பட்ட பின் முடி சூட்டப்பட்ட இரண்டாம் சாள்ஸ் மன்னன் காலத்தில் இங்கிலாந்தின் நிலைமை இழிவாகவே இருந்தது. கடுந் தூய்மை முதலிய கோட்பாடுகள் கேலிக்குரியனவாயின. வாழ்க்கை முறையிலும் போலித்தன்மையும், சின்னத்தனமும் இடம் பெற்றன. அதனால் இலக்கியத் துறையும்சீர்கெடுவதாயிற்று. புலவர்களும் என்றுமில்லாதவாறு தரங் குறைந்தவராய் இருந்தனர்.

இத்தகைய சீர்கேடுகளில் சேற்றில் முளைக்குஞ் செந்தாமரைபோல இலக்கியத்தின் ஓரம்சமான வசனநடை உருவாகி வளர்வதாயிற்று. முதலில் துண்டுப்பிரசுரம் எழுதுந்துறையில் பிறந்த வசனநடை அத்துறையிலே நடைபழகிக் கட்டுரைகள் எழுதும் அளவுக்கு ஓங்கியது; இன்னும் இக்காலத்திலேதான் பிரான்சு நாட்டுப் புலவர்களின் தாக்கமும் இங்கிலாந்தில் பரவிப் பயனளித்தது. முன்னர் நிலவிய இத்தாலியப் புலவர்களின் செல்வாக்கு மறையப் பிரெஞ்சுப் புலவரின் செல்வாக்குத் தாக்குவதாயிற்று. ஆங்கிலப் புலவர்கள் ப்ரெஞ்சு இலக்கியங்களின் போக்கைப் பெரிதும் பின்பற்றிய காலமும் அஃதேயாகும்.

அக்காலத்து ஆங்கிலப் புலவர்களுள் முன்னணியில் நின்றவருள் டிறைடனை முதன்மையாகக் கூறலாம்; அக்காலப் புலமையின் போக்கும் அவரின் கவிதைகளிலேதான் அதிகமாகப் பிரதிபலிக்கின்றது. எனினும் அவர் தமக்கு வழிகாட்டிகள் எனக் கூறும் வேறு இரு ஆங்கிலப் புலவர்களின் பெயர்களையும் இங்கு கூறுதல் அமைவுடையதாகும். அவர்கள் எட்மன் வாலர், சேர் ஜோன் டென்ஹாம் என்பவராவர். இவர்களுள் வாலர் என்பாரே முதன் முறையாகச் செய்யுளிற் சந்தம் அமைவுடையதாகும் எனக் கூறி அதனைக் காண்பித்தவர். எனினும் அந்தச் சந்தநயம் அவருக்குப் பின்வந்த அலெக்சாண்டர் போப் என்பாரிடத்திலேதான் பொங்கித் ததும்பிப் பூரணப் பொலிவு பெற்றுத் துள்ளலோசையில் செல்லநடை நடக்கின்றது. அடுத்த பெருங் கவிஞனை சேர் யோண் டென்ஹாம் செய்த கவிதைகளில் வர்ணனை மிக்குள்ளது. இவற்றை எல்லாம் டிறைடன் கருத்தூன்றிப் படித்து இரசித்தார் என்பர். அவற்றுள் கூப்பேர்ஸ் ஹில் என்னும் கவியில் இயற்கை வர்ணனை அழகுள்ளது.

(வளரும்)

## ஆசுகவி... வேலுப்பிள்ளை

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

னும், விமர்சகருமான செந்தமிழ்மணி பொன். கிருஷ்ணபிள்ளை அவர்கள் மதிப்புரையிற் கூறுவதுபோல 'இந் நூலாசிரியர் எழுதும் தமிழ் நம்மைக் கவர்கிறது.' வடமொழி கலந்த மணிமிடை பவளமாக நூலாசிரியரின் உரைநடை அமைந்திருந்த போதிலும் அதில் ஒரு தனிக் கவர்ச்சி உண்டு என்பதில் ஐயமில்லை.

நூலின் வாழ்த்துரையில் பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள் கூறுவதை முடிவுரையாகக் கீழே தருவது பொருத்தமுடையதாகும் :-

'கல்லடி வேலுப்பிள்ளையின் படைப்புக்கள் பல அவருக்குக் (நூலாசிரியர்க்குக்) கிடைக்கவில்லை; அவற்றையும் தேடி எடுத்து ஆசுகவியின் முழுமையான தொண்டினை ஆசிரியர் மதிப்பிடுவாரென எதிர்பார்க்கின்றோம். அதற்குரிய மனப் பாங்கும் ஆற்றலும் அவரிடம் உண்டு. அவர் முயற்சிக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிப்பது ஈழத்துத் தமிழிலக்கிய வளர்ச்சியிற் கருத்துடையோர் கடனாகும்.'

ஆசுகவியின் படைப்புக்களை அச்சுப்படியாகவோ, கையெழுத்துப் படியாகவோ பாதுகாத்துவைத்திருப்போர் அனைவருக்கும் பேராசிரியரின் வேண்டுகோளைச் சமர்ப்பிக்க விரும்புகிறோம்.

நூலாசிரியர் :-
விஜயேந்திரன்

பதிப்பு:-
நயினார் பிரசுரம்,
மாவிட்டபுரம்.

விலை :-
ரூபா 4/=

பக்கங்கள் :-
90+xii

"கலைக்கண்"
தனிப்பிரதி 25 சதம்
சுன்னாகத்தில் தனலக்குமி புத்தகசாலையிலும்
யாழ்ப்பாணத்தில்
சண்முகநாதன் புத்தகசாலையிலும்
பெற்றுக்கொள்ளலாம்

# பாவேந்தர் பாடல்கள்

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

காட்சி'களின் மறுபதிப்புக்களை இயற்கை நிகழ்ச்சிகளிற் கண்டு நெஞ்சம் குமுறி, அவ்வியற்கை நிகழ்ச்சியினைப் படம்பிடித்துக் காட்டியுள்ள பாவேந்தர் பாடல் ஒன்றில், அவர் முத்திரை விழுந்து தோன்றுகிறது. அப்பாடல் வானில் விண்மீன்கள் தோன்றியுள்ள காட்சியை வியக்கும் பாடலாகும்.

விண்மீன் என்றால், இதயம் விம்மி எழிலோடு கொஞ்சிக் கொஞ்சிப் பாடுவது கவிஞர்க்கியல்பு. பாவேந்தர் இதயம் விம்முகிறது; எழிலோடு குமுறிக் குமுறி அவர் பாடுகிறார்; அந்தப் பாடலிலே, அவர் இதயப் பார்வை விழுந்திருக்கிறது. உழைக்கும் மக்கள் வறியர்களாம்; அவர் உரிமை கேட்டால் உதைத்து நொறுக்கும் புலையர்கள் செல்வர்களாம். இதனை மண்மக்கள் கண்டும் காணாதவராய்த் தம் வயிற்றுப்பாட்டைக் கவனிக்கின்றனர். ஆனால் வானமோ, இதனைப் பகலில் எல்லாம் காணுகிறது; கொதிப்படைகிறது. அந்திக்குப் பின் கொதித்த உடம்பில் குளிர் காற்று வந்து மோதக் கொப்புளங்கள் வெடிக்கின்றன. வானின் கொப்புளங்களே நட்சத்திரங்கள்; அழகுமிகு விண்மீன்களை அருவருப்புக்கிடமான கொப்புளங்களோடு தொடர்பு படுத்தி, அக் கொப்புளங்களிலும் ஆராக் கவியழகை வெளிப்படுத்தும் பாவேந்தர் பாடற்றிறன் இருந்தவாறென்னே; அவர் இதயப் பார்வை விழுந்தவாறென்னே!

"மண்மீதில் உழைப்பா
ரெல்லாம்
வறியராம்; உரிமைகேட்டால்
புண்மீதில் அம்பு பாய்ச்சும்
புலையர்செல்வராம்; இதைத்தன்
கண்மீதில் பகலில்எல்லாம்
கண்டுகண் டந்திக்குப்பின்
விண்மீனாய்க் கொப்புளித்த
விரிவானம் பாராய்தம்பி[6];"

## பாவேந்தர் கொள்கை என்ன ?

கொள்கை உறைப்பு மீதூரப் பெற்ற உள்ளத்தினன் உண்மைக் கவிஞன் ஆவான். பாவேந்தர் தாம் வாழ்ந்த காலத்து, சமுதாயங் கண்டார்: நாட்டைக் கண்டார்; துணைக்கண்டம் கண்டார்; உலகத்தைக் கண்டார். சமுதாய இழிவு இவர் நெஞ்சை உறுத்திற்று; நாட்டைப் பிடித்தலைக்கும் கேடுகள் அவரைக் குமுறச் செய்தன; இருட்டறை உலகம் அவரைக் குருதிக் கண்ணீர் வடிக்கச் செய்தது.

சாதிப் பிளவு, சமயப் பிரிவு, பொருளாதார ஏற்ற இறக்கம் இவற்றின் காரணமாய், எத்தனையோ பூசல்கள் நாட்டில் நடந்து கொண்டிருந்தன. மேலும் மேலும் சுரண்டல், ஏமாற்றல், கெடுத்தல் ஆகிய வினைகளில் மதத்தின் பேராலும், கடவுட் பேராலும், பகுத்தறிவின் பேராலும் வல்லாளர்கள் இறங்கி நின்றனர். சமுதாயக் களத்தில் உழைப்போர் அடிமைகளாய் உழன்று வந்தனர். சாதி ஏற்றத் தாழ்வு, மக்களிடைச் சமத்துவ எண்ணத்தை இல்லாதொழித்தது. எனவே சகோதரத்துவம் மாண்டது.

புதிய உலகத்திற்குத் தடைபோடும் பொருந்தா ஊறுகளைக் களைய, பாவேந்தர் விழைந்தார். இருட்டறை உலகம், ஒளி மிகுந்த வெளிக்கு இட்டு வரப்பெறல் வேண்டும். அவ்வுலகம் மனித நாகரிகம் மிக்க உலகாக அமைதல் வேண்டும். அங்கு உடைமை மக்கட்குப் பொதுவாக இருத்தல் வேண்டும். பகுத்தறிவில் மக்களெலாம் விடுதலை உணர்வினராய் வீறுடன் இருந்து, உண்மையொடு உழைத்துவரல் வேண்டும்.

எனவே, புதிய உலகம், ஒற்றுமையுடன் திகழ, சாதி ஒழிக்கப்படல் வேண்டும். சாதி ஒழிப்பில், பாவேந்தர் முழுக் கருத்தும் பதித்திருந்தார்: 'சாதி ஒழிப்பும்—நல்ல தமிழ் வளர்ப்பும் நாடு மேற்கொள்ள வேண்டும். இவற்றில் ஒன்றில் மற்றொன்று துலக்கமுறும்' என அவர் உறுதியுடன் உரைத்தார். 'சாதி உண்டு' என ஒருவரும் சாற்றக் கூடாது. அவ்வாறு சாற்றுவோன், நாகரிக உலகிற்கு மாசு விளைக்கும் மூடன் ஆவான்; அவன் இல்லாத உலகே புதிய உலகு. மக்கள் உள்ளத்தில் மருட்சியை ஏற்படுத்தும் மதத்தலைவர், புதிய உலகில் இரார்.

"பாதிக்கு தேபசி
என்றுரைத் தால்செய்த
பாபத்தைக் காரணம்
காட்டுவார் — மத
வாதத்தை உம்மிடம்
நீட்டுவார் — பதில்
ஓதிநின் சூல்படை
கூட்டு வார்"

என்ற மருட்கை ஊட்டுகின்ற மதத் தலைவர்களின் செயல், புதிய உலகில் காணப்படாது. 'பட்டினி கிடப்போன் பாவியாகக் கருதப்பட்டும், அப்பாவிக்கு உணவளிப்பவனும் பாவத்தில் பங்கு பெறுபவனாக நினைக்கப் பட்டும் அச்சுறுத்தப்படும் வந்த இழிநிலை,[7] நிலவாது.

இருட்டறை உலகில், வாயடியும், கையடியும், இருட்டுக் கலையப் பெருதவரை, மறையா: இவ் வாயடியும் கையடியும், ஏமாந்த காலத்தில் ஏற்றங்கொண்டு புலிவேஷம் போட்டிருக்கும் பேர்களுக்கும், உதையப்பர் ஆன ஒடப்பர் என்னும் ஏழையர்க்கும் இடையில நடப்பவை. புதிய உலகில் இவை மறையும்; ஏமாந்தார் காசுக்கு எசமானர் ஆனோர், ஆனவரை பிறர்பொருளைச் சுருட்டுவது, இருட்டறை உலக நிகழ்ச்சி புதிய உலகில் சுரண்டல் ஒழிக்கப்படும். உலகம் உண்ணத் தானும் உண்பதும் உலகம் உடுத்தத் தானும் உடுத்தி மகிழ்வதும், பகுத்தறிவுள்ள மாந்தர் செயல். புவியைப் பொதுவில் நடத்திச் செல்வதும் அவர்க்குக் கடமை. அவரே விடுதலை பெற்ற மாந்தராவர். அவர்க்குக் கெடுதல் இல்லை.

"இருட்டறையில் உள்ளதடா
உலகம் சாதி
இருக்கின்ற தென்பானும்
இருக்கின்றானே!
மருட்டுகின்ற மதத்த லைவர்
வாழ்கின்றாரே!
வாயடியும் கையடியும்
மறைவ தெந்நாள்?
சுருட்டுகின்றார் தம்கையில்
கிடைத்த வற்றை
சொத்தெல்லாம் தம
தென்று சொல்வார் தம்மை
வெருட்டுவது பகுத்தறிவே
இல்லை யாயின்
விடுதலையும் கெடுதலையும்
ஒன்றே ஆகும்"[8]

'அறிவுரை'யாலும், 'அன்பழைப்பா'லும் புதிய உலகைச் சமைக்கத் துடித்த பாவேந்தர் துடிப்பு, மேற்கண்ட முறைகள் பயனற்றுப் போக, 'அனல்வீச்'சாக வெளிப்பட்ட இடங்களும் உண்டு.

(தொடர்ச்சி 8ஆம்பக்கம்)

# தெய்வீகம்

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

னுடைய மனைவியோ மக்களோ அப்போது அங்கில்லை.

அவர்களும் கோயிலுக்குத்தான் சென்று விட்டார்களோ?

எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றியதைப் போலிருந்தது அவனுக்கு.

அவன் புறப்பட்டான். வெறுப்பு, வேதனை, ஆத்திரம், அவமானம், ஏக்கம், ஏமாற்றம் — எல்லாம் கலந்த ஓர் உருவமாக வீறோடும் வெறியோடும் புறப்பட்டு விட்டான்.

மனத்தின் ஆவேசத்துக்கு ஈடுகொடுக்க அவனுடைய கால்களால் முடியவில்லை. இரண்டு நாட் பட்டினிவேறு, அவனைத் தள்ளாடித் தடுமாறச் செய்தது. என்றாலும் ஒருவித வைராக்கியத்துடன் அவன் கோவிலை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான்.

❋

கோவிலை அவன் அடைந்தபோது, ஊர் முழுவதும் அங்கே திரண்டு நிற்பது தெரிந்தது. அனைவருமே அந்த விநாயகரை நோக்கிக் கை கூப்பியபடி நின்றனர். பலருடைய கண்களிலிருந்து கண்ணீர் சொரிந்து கொண்டிருந்தது.

'கஷ்டப் படுபவர்களுக்குக் கண்ணீரைக் கொடுக்கத்தான் இந்தக் கல்லால் முடியும். வயல்களில் மழையைப் பெய்விக்க முடியுமா?'

ஒருவித ஏளனப் பார்வையுடன் அந்த மனிதக் கும்பலை நோக்கினான். முன் வரிசையில் அவனுடைய மனைவியும் பிள்ளைகளும் பயபக்தியுடன் நின்றனர். மனைவியின் கைகளில் ஏன் ஒரு பாத்திரம்? கோயிற் பிரசாதத்துக்காகவா?

பாத்திரத்தைப் பிடுங்கி எறிந்துவிட்டு அத்தனை பேருக்கும் மத்தியில் வைத்து அவளுக்கு அடித்தாற்றான் அவனுடைய ஆத்திரம் திரும் போலிருந்தது.

சிறிதும் தாமதியாமல் அவள்மேற் பாய்ந்தான், உரத்த குரலில் எதையோ கர்ச்சித்தபடி கையை ஓங்கியவன் அடுத்த கணமே சுருண்டு விழுந்தான்......

"குமரையனைத் தூக்குங்கள்... முகத்திலே தண்ணீர் தெளியுங்கள் காற்றுப் படும்படி நன்றாக விசுறுங்கள்......" என்ற குரல்கள் எழுந்தது அவனுக்குக் கேட்கவில்லை. அனைவருமே அவனுக்காகப் பரிதாபப்பட்டதும், பரபரப்படைந்ததும், ஒவ்வொருவரும் அவனுக்கு ஏதாவது உதவி செய்யவேண்டும் என்று துடிதுடித்ததும் அவனுக்குத் தெரியாது.

❋

நீண்ட நேரத்தின்பின் மயக்கம் நீங்கிச் சிறிது சிறிதாக உணர்வு திரும்பிய பொழுது, தன் மனைவியின் மடியிற் தான் படுத்திருப்பதையும், கோயிற் பிரசாதத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக முருகையன் ஊட்டிக் கொண்டிருப்பதையும் அவன் உணர்ந்தான்.

" முருகையாண்ணை, இன்டைக்குக் குமரையாண்ணையின்ரை உப்பு மட்டும் வந்திராவிட்டால், உங்களின்ரை அரிசியாலும் அவ்வளவு பிரயோசனம் இருந்திருக்காது" என்று யாரோ சொல்லிக்கொண்டிருந்தது குமரையனுக்குத் தெளிவாகவே கேட்டது.

'மின்' வெட்டினாற் போன்றிருந்தது அவனுக்கு.

போன தடவை அவனுடைய வயிற்றெரிச்சலைக் கிளறிக்கொண்டு பெய்த மழையில் விளைந்த அரிசி தானா இன்று அவனுக்கு உயிரளித்துக் கொண்டிருக்கின்றது? அதே அரிசியுடன் தானா அவனுடைய உப்பும் இரண்டறக் கலந்திருக்கிறது?

விக்னேஸ்வரா...... விநாயகா ......"

பேருண்மை ஒன்றைப் புரிந்துகொண்ட பேரானந்தத்தில் குமரையனுடைய வாய் அவனை அறியாமலே கூவியது.

"அரோகரா.......பிள்ளையாருக்கரோகரா......"

கூடிநின்ற மக்களும் கூவினர்; கூத்தாடிக் கும்பிட்டனர்.

வெளியே மழைத்துளிகள் சட சடத்தன.

கடவுள் கண்திறந்து விட்டார் என்ற நம்பிக்கையில் விநாயகரை நோக்கி அனைவருமே கைகூப்பினர்.

ஆனால், விநாயகர் மட்டும் ஆழக்கடலின் அமைதியுடன், அனைத்தையும் அறிந்துகொண்டுள்ள நிறைவுடன், அனுதினமும் கடைப்பிடிக்கும் தெய்வீக மௌனத்துடன் அழகொழுக அங்கே வீற்றிருந்தார்.

## கலை உலகிற்கு ஒருவர்

குமாரி பிரின்ஸி நாதன் அவர்களின் நாட்டிய அரங்கேற்றம் திருச்சி தேவர் மன்றத்தில் அண்மையிற் சிறப்புற நிகழ்ந்தது.



இந்த இளம் கலைஞர் நாட்டியக் கலைக்கு வேண்டிய சிறப்புக்கள் அனைத்தும் வாய்க்கப் பெற்றவர். சுருதி, லயம், இசை, சாகித்தியம், கலை ஞானம், குருபக்தி அனைத்தும் இவர்பால் உள்ளன.

ஜதீஸ்வரம், தில்லானா, "சாமியை வரச் சொல்லடி" என்று துவங்கும் வர்ணம், "ஆடுமிடம் தெரிந்து ஆட வேண்டும்" என்று துவங்கும் பதம் ஆகியவை வெகு சிறப்பாக அமைந்தன. ஆண்டாள், குறத்தி ஆட்டத்தில் அடுத்தடுத்துப் பல கைதட்டல்! குமாரி பிரின்ஸிக்கு அவரது குருவாகிய திரு. சி. ராதாகிருஷ்ணன் நன்கு பயிற்றுவித்திருக்கிறார். விழா, திருச்சி பிஷப் தாமஸ் பெர்னாண்டோ முன்னிலையிலும், நகரசபைத் தலைவர் டாக்டர் வி. கே. ரங்கநாதன் தலைமையிலும் நடைபெற்றது. விழாவிற் கலந்துகொண்ட அனைவரும் பரிசுகளும், வாழ்த்துக்களும் அளித்து பிரின்ஸிக்கு ஆசி கூறினர். திருமிகு டெரிநாதன் நன்றி கூறினார். ஹோலிக்கிராஸ் கல்லூரியின் பி. ஏ. மாணவியான இவர் அரங்கேற்றத்திற்கு முன்பே பல மேடைகளில் ஆடி அனுபவம் பெற்றவர். இவருக்கு மேலும் மேலும் பல கலைகளில் ஊக்கமும் ஆர்வமுமூட்டும் இவரது பெற்றோராகிய திரு. நாதன், திருமதி விமலாநாதன், பிரின்ஸியின் மற்ற ஆர்வங்களைவிடப் பரதக்கலையில் முழுப் பயிற்சியையும் அளித்தல் வேண்டும்— ஏனெனில் அவர் கலை உலகில் சிறந்து விளங்க பல நல்ல அம்சங்கள் அவரிடம் விளங்குகின்றன. பரதம் சிறப்பு.

# பாவேந்தர் பாடல்கள்

(7ஆம் பக்கம்தொடர்ச்சி )

### செஞ்சொற் கவி இன்பம்

செஞ்சொற் கவிஇன்பம் பாவேந்தர் பாடல்களில் பஞ்சமின்றி எய்தலாம். நெஞ்சிற் கனல் மணக்கும் பூ ஒத்த காதலினைப் பாடும் போதெல்லாம் இன்பம் ஊறி வரும். "இன்பம், கொள்ளை, கொள்ளை, கொள்ளை மாந் தோப்பில்" என்றபோதும், "எது எனக்கின்பம் நல்கும்? இருக்கின்றாள் என்பதொன்றே" என்னும் போதும் இளமைக்காதலின்பமும், முதுமைக் காதலினிமையும் தெற்றென எடுத்துக் காட்டப்படும். காதல் இனிமையும் தெற்றென எடுத்துக் காட்டப்படும். காதல் அகராதிக்கு, பாவேந்தர் வாரி அள்ளி வழங்கிய அற்புதச் சொல்லாக்கங்கள் மிகுதி! மிகுதி!! 'தமிழ்ச் சுவடிக் கன்னம்', 'நறுங்கவிச் சுவைகள்', 'கன்னலின் சாற்றுக் கடல்', 'இன்பம் மொண்டு மாண்டருந்தும் சோலை', 'தென்னம்பாளைச் சிரிப்பு' — இவை ஒருசில.

இவ்வாறு, ஒரே பாடலில் தம் கவிதை முத்திரை விளங்க, அழகிய, செறிவுமிக்க, இன்பம் தரக்கூடிய செஞ்சொலாக்கங்களை அளித்துள்ளார் பாவேந்தர். 'ஆணழகு', 'ஓடைக்குளிர் மலர்ப் பார்வை', 'பட்டுத் தெறித்தது' என வரும் சொல்லாக்கப் பகுதிகளில் சிந்தை சிக்குண்டு, எண்ணம் சிலிர்க்க இன்பக் கிறக்கத்தால் தலைதடுமாறுகின்றோம். 'ஒரே வரியிலோ, அல்லது ஓர் உரிச்சொல்லிலோ, நமது கற்பனையிலே கவிஞன் ஒளிரச் செய்யும் ஒரு படம், புலனின்ப உணர்ச்சி நிறைவாக இருக்கும்' என்ற கூற்றுக்கு இணங்க. (In a single line, sometimes in a single epithett the poet can flash upon our imagination, a picture that shall seem filled with passionate emotion' — C. T. Winchester)

'பட்டுத் தெறித்தது மானின் விழி, என்ற வரியும்,

'ஆடை திருத்தி நின்றாள் அவள்தான் — அவன்
ஆயிரம் ஏடு திருப்புகின்றான்'.

என்ற அடியும் அமைந்திலங்குகின்றன. இதோ அந்தப் பாடல்:

'கூடத்தி லேமனப் பாடத்
திலே — விழி
கூடிக் கிடந்திடும் ஆண
ழகை
ஓடைக் குளிர்மலர்ப் பார்வையி
னால் — அவள்
உண்ணத் தலைப்படு நேரத்
திலே
பாடம் படித்து நிமிர்ந்த
விழி — தனிற்
பட்டுத் தெறித்தது மானின்
விழி
ஆடைதி ருத்திநின் றாள்அவள்
தான் — இவன்
ஆயிரம் ஏடு திருப்பு
கின்றான்'

உணர்ச்சிப் பெருக்கும் எளிமை இனிமை, அழகுக் கவர்ச்சிகளும் செறிந்து, தாமே இயல்பாய் விழுந்த சொற்களைப் பெற்று, பொருள் சிறந்து, ஒளி மிகுந்து காணப்படும் பாவேந்தர் முத்திரைப் பாடல் சில கண்டோம். பாவேந்தரை அறிந்து தெரிந்துகொண்டோம். செஞ்சொற் கவி இன்பம் மகிழ்ந்து உண்டோம். வாழ்க கவிதை! வெல்க பாவேந்தர் புகழ்!!

**அடிக்குறிப்புகள்**

1. சமுதாய இலக்கியம் — இரகுநாதன்.
2. கா. அப்பாத்துரை (மேற்கோள்: புதிய தமிழ்க் கவிதை — சாலை இளந்திரையன்.
3. தமிழ்விடு தூது.
4. முதல் தொகுதி.
5. அழகின் சிரிப்பு: முகப்புக் கவிதை
6. அழகின் சிரிப்பு.
7. சத்திய தருமச்சாலை: மா. பொ. சி.
8. பாண்டியன் பரிசு.




கலைக்கண்ணே!

வாழ்க,
உன்பெயர்!

வளர்க,
உனது புகழ்!

இப்பத்திரிகை, சுன்னாகம், திருமகள் அழுத்தகத்தில் அச்சிடப்பெற்று, யாழ்ப்பாணம், டேவிட் வீதி, 28ஆம் இலக்கத்திலுள்ள திரு. ச. பெனடிக்ற் அவர்களால் வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: புலவர் ம. பார்வதிநாதசிவம். 23-12-73
— ஏ 770/12-73